DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1516 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 25, 2025

# Liberal Leader Mark Carney says if he wins the Election, he will push for an immediate Meeting with President Donald Trump.

# 28ம் திகதிய தேர்தலில் வெற்றி பெற்றால், அதிபர் டொனால்ட் டிரம்புடன் நேரடி சந்திப்புக்காக அழுத்தம் கொடுப்பேன் என்கிறார் லிபரல் தலைவர் மார்க் கார்னி



ஏதிர்வரும் திங்கட்கிழமை 28ம் திகதி நடைபெறும் தேர்தலில் தமது வெற்றி பெற்று ஆட்சி அமைத்தால் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்புடன் நேரடி சந்திப்புக்காக அழுத்தம் கொடுப்பேன் என்று பிரிட்டிஸ் கொலம்பியாவில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் லிபரல் தலைவர் மார்க் கார்னி வியாழக்கிழமை தெரிவித்தார்.

தேர்தல் திகதி அறிவிக்கப்பெற்ற முதல் வாரத்தில் தான் டிரம்புடன் தனது முதல் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டதாகக் கூறிய அவர். தேர்தல் முடிந்தவுடன் டிரம்பும் கனடாவின் பிரதமரும் உரையாடி இரு நாடுகளுக்கும் இடையே ஒரு புதிய வர்த்தக மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து உடனடியாக விவாதங்களைத் தொடங்கவேண்டும் என்று முன்னரேயே தாங்கள் இருவரும் ஒப்புக்கொண்டதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

விக்டோரியாவில் பிரச்சாரம் செய்த மார்க் கார்னி அவர்கள். முதல் சந்திப்பு "சில நாட்களுக்குள்" நடக்கும் என்றும், அது இரண்டு இறையாண்மை கொண்ட இரண்டு நாடுகளின் தலைவர்களுக்கு இடையே ஒரு "லட்சியங்களைக் கொண்டதும் பரந்த அளவிலான கலந்துரையாடலாகவும் இருக்க வேண்டும் என்றும் கூறினார். அமெரிக்க ஜனாதிபதி சமீபத்திய வாரங்களில் கனடா மீதான தனது விமர்சனங்கள் குறித்து அமைதியாக இருந்து வருகிறார், ஆனால் புதன்கிழமை வெள்ளை மாளிகையில் பேசிய டிரம்ப், அமெரிக்காவிற்கு கனடாவிடமிருந்து எதுவும் தேவையில்லை, அது ஒரு அமெரிக்க நாடாக மாற வேண்டும் என்ற தனது கூற்றுகளை மீண்டும் கூறினார், மேலும் முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை "கவர்னர்" என்று அழைத்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது

புதன்கிழமை மாலை பிரிட்டி' கொலம்பியாவின் சர்ரேயில் நடந்த ஒரு பேரணியில், கார்னி தனது வழக்கமான கருத்துகளிலிருந்து விலகாமல், டிரம்பின் புதிய கருத்துக்களை சுருக்கமாக ஒப்புக்கொண்டார்.

"அதிபர் ட்ரம்ப் அவர்க்ளஓவல் அலுவலகத்தில் அவர் மீண்டும் ஒருமுறை தெளிவுபடுத்தியது போல்... அமெரிக்கா கனடாவை சொந்தமாக்கிக் கொள்ளும் வகையில் அவர் கனடியர்களான நம்மை உடைக்க முயற்சிக்கிறார்," என்றும் மார்க் கார்னி கூறினார்.



# பல்லின சமூக நிகழ்வுகளுக்கு ஒன்ராறியோ அரசால் இவ்வாண்டு 20 மில்லியன் டொலர்கள் வழங்கப்பெற்றுள்ளன – தமிழ்ச் சமூகத்தின் கலை, கலாசார நிகழ்வுகளுக்கும் நிதியுதவி

ஒன்ராறியோ மாகாணத்தில் இவ்வருடம் பல்லியனச் சமூகங்களின் கலை, கலாசார நிகழ்வுகளையும் பண்டிகை நிகழ்வுகளையும் நடத்துவதற்கு ஒன்ராறியோ அரசாங்கம் 20 மில்லியன் டொலர் நிதியை முதலீடு செய்துள்ளது. தமிழ்ச் சமூகத்தின் கலை, காரசாரத்தை வெளிப்படுத்தும் நிகழ்விற்கும் இதில் 55,000 டொலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஒன்ராறியோ மாகாண அரசின் சுற்றுலாத்துறை, கலாசார அமைச்சர் ஸ்டான் சோ அவர்கள் நேற்று வியாழக்கிழமை 24ம் திகதி இதற்கான அறிவிப்பை உத்தியோகபூர்வமாக வெளியிட்டார். (தொடர்ச்சி 14ம் பக்கம்)

SHIYARA FINANCIAL SERVICES
(An Agency for the Real Estate, Mortgage & the Finance)
வீடு-வியாபார நிலையங்கள் வாங்க, விற்க
Mortgages - Refinancing
Equity Line of Credit
Personal - Business Loans
Line of Credits - Credit Cards
Debt Consolidation
கிருஷ்ணா - KRISHNA
(647) 308-6069
shiyara@ymail.com
ENJOY THE FREEDOM OF BETTER CREDIT

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851


Akshaya Tritiya
on 29th & 30th April, 2025
Pre Booking Open
Adorn auspiciousness, this Akshaya Tritiya.
Akshaya Tritiya Special!
Special Discounts Available on
Thali Kodi
Your Precious investment start with Gold on this special day of wealth bringing Akshaya Tritiya.
THANGA MAALIGAI JEWELLERS LTD.
KANAGAAMBIKAI PAWN BROKERS INC
We Sell: Singapore Jewellery | Finest Quality 22k Gold
Diamonds | Birth Stone | Jewellery | Watches
2613, Eglinton Ave East, Scarborough, ON M1K 2S2
416 269 7198
info@sugshe.com

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# சாதாரண தமிழர்கள் அரசியல் அனாதைகளாக இருப்பதற்கு தென்னிலங்கைக் கட்சிகளை கடந்த காலங்களில் நிராகரித்தமை காரணமாக அமையலாம்!

"தென்னிலங்கைக் கட்சிகளை ஆதரிக்க வேண்டாம்" என்று தற்போது கோசங்களை எழுப்புகின்றவர்கள் யாருடைய "வாரிசுகள்" என்றால் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாத்திரம் தங்கள் ஆதரவை வழங்கிய வண்ணம் அந்தக் கட்சியிடமிருந்து மாறி மாறி தங்கள் பிள்ளைகளுக்கு பதவிகளைப் பெற்றுக்கொண்டிருந்த தமிழ்த் தலைவர்களுடைய தொடர்ச்சிதான் என்பதை நிச்சயமாகக் கூறலாம். அவ்வாறிருக்கையில் யாழ்ப்பாணத்தில் உள்ளாட்சித் தேர்தல் களத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் உரையாற்றும் போது பின்வருமாறு கூறுகின்றார் தமிழ்க் கட்சிகள் எல்லாமே உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க வேண்டாம் என்று மக்களைக் கேட்டுவருகின்றன. ஜே.வி.பியை மாத்திரம் அல்ல் தென்னிலங்கைக் கட்சிகள் எதையுமே நாம் ஆதரிக்க முடியாது.என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கைக் கட்சிகளை நிராகரிக்கும் அதேசமயம் தமிழ்க் கட்சிகளில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் யார் யாரை தமிழ் மக்கள் ஒதுக்கிவைக்க வேண்டும் என்பதையும் அவர் வெளிப்படையாகக் கூறினால் எமது தமிழ்க் கட்சிகளின் வேட்பாளர்களில் அரைவாசிப் பேர் தகுதியற்றவர்களாகவே கணிக்கப்படுவார்கள் என்பது ஐங்கரநேசன் அவர்களுக்கு நன்கு தெரியும்.


இன்னுமொன்றையும் நாம் இந்த இடத்தில் குறிப்பிட வேண்டும். சுமார் 40 ஐம்பது வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இலங்கைக் கம்யுனிஸ்ட் கட்சி. சுமசமாஜக் கட்சி சீனச் சார்பு கம்யுனிஸ்ட் கட்சி ஆகியவற்றில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் இணைந்து அவற்றின் கொள்கைகளை பரப்புவதில் துரிதமாக ஈடுபட்டார்கள். ஆனால் அந்த காலப்பகுதியில் ஐக்கிய தேகியக் கட்சியை ஆட்சி பீடத்தில் அமர்த்த வேுண்டும் என்பதற்காக செல்வநாயகம், அமிர்தலிங்கம் போன்றவர்கள் மேற்படி இடதுசாரிக் கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டாம் என்று உரத்துச் சத்தமிட்டார்டகள். ஆனால் அன்றை அரசியலின் ஆரம்பரம் டட்லி சேனநாயக்காவிலிருந்து ஆரம்பித்து பின்னர் ஜேஆர் பிரேமதாச என்று தொடர்ந்த இறுதியில் ரணிலின் காலம் வரையிலும் எமது தமிழ்த் தலைவர்கள் அனைவரும் இடது சாரிச் சிந்தனைகளுக்கு எதிராகவே செயற்பட்டார்கள். ஆனால் ரணில் என்னும் கபடத்தனம் கொண்ட அரசியல்வாதியால் தமிழ் மக்கள் அனைவருமே வஞ்சிக்கப்பட்டார்கள் என்பதும் உண்மையே. அதன் விளைவை அப்பாவித் தமிழ் மக்கள் தற்பொழுது அனுபவிக்கின்றார்கள்.

இன்னும் சொல்லப்போனால். தற்கால தமிழர் அரசியலில் பிரச்சனைக்குரியவராக உள்ள சுமந்திரன் அவர்களும் ஐக்கிய தேசியக் கட்சி என்ற முகாமிற்குள் இருந்து தான் தமிழ் கட்சி ஒன்றுக்கு அனுப்பப்பட்டவர் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. இதைப் போன்றே மறைந்த சம்பந்தன் ஐயா வரையிலும் இறுதியிலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கே மறைமுகமான ஆதரவை வழங்கி வந்தார். ஆனால் ரணில் வரையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆடசிக் காலத்தில் எந்தவொரு நன்மையும் தமிழ் மக்களுக்கு கிட்டவில்லை. ஆனால் அக்காலப் பகுதியில் பாராளுமன்ற உறுபபினர்களாக விளங்கிய அனைத்து தமிழ் அரசியல்வாதிகளும் "ஆட்சியினரால் "கவனிக்கப்பட்டவர்கள்" என்பதும் வெளிச்சத்திற்கு வந்த விடயமே. ரணில் அவர்களுக்கு எதிராகக் கொண்டு வரப்பெற்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முறியடிப்பதற்கு எமது "தமிழ்த் தரப்பு" உதவியமைக்காக அவர்களுக்கு "சந்தோசங்கள்" கிட்டியமை பகிரங்கமாக கொழும்பில் பேசப்படும் விடயங்கள்தான்.

இந்த வேளையில் தற்போது ஆட்சியில் உள்ள அநுரவின் தேசிய மக்கள் முன்னணி" கட்சியானது வடக்கை நோக்கி தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளதை எவ்வாறு தமிழ்க் கட்சிகள் முறியடிக்கப் போகின்றன என்பதும் முக்கியமானதொன்றாகும். ஏனென்றால் அநுர அவர்களின் அரசாங்கத்தில் வெளிப்படைத் தன்மை இல்லாமையும் அவரது சார்பில் வடக்கைப் பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்களின் இயலாமையும் அந்தக் கட்சியிடம் வடக்கின் உள்ளாட்சி நிர்வாகத்தை தமிழ் மக்கள் வழங்க வேண்டும் என்று நாம் கூற வரவில்லை. அதுவும் "யோசிக்க வேண்டிய" விடயம் தான். இவ்வாறு நான்கு பக்கங்களிலும் தமிழ் மக்கள் யோசித்து வாக்களிக்க வேண்டும் என்ற அவசியமான ஒன்றே எம் மக்கள் முன்பாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வடக்கில் உள்ளாட்சித் தேர்தல்களில் போட்டியிடும் நூற்றுக்கணக்கானவர்கள் சட்டத்தரணிகளும் உள்ளார்கள். அப்படியானால் ஐங்கரநேசன் போன்று வெளிப்படையாகப் பேசுகின்ற வடக்கின் அரசியல்வாதிகள் மேலும் வெளிப்படைத்தன்மை கொண்டவர்களாக தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் இறுதியில் ஐங்கரநேசன் அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதியாக பின்வரும் வரியை இங்கு பதிவு செய்து எமது இவ்வாரக் கதிரோட்டத்தை நிறைவு செய்கின்றோம். "தமிழ்த் தேசிய அரசியலை வியாபாரப் பண்டமாக்கி மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் தமிழ் அரசியற் கட்சிகளையும் மக்கள் அடியோடு நிராகரிக்க வேண்டும்" என்றும் பொ. ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார். "கண்ணா நீயுமா?" என்று கேள்விகளை கேட்க வேண்டிய தலைவர்களிடத்தில் மீண்டும் மீண்டும் தமிழர்களின் அரசியல் தலைமை கையளிக்கப்பட வேண்டுமா என்பதும் எமது கேள்விகளில் இன்னொன்றாக அமைகின்றது.


MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728



Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing?
Secured Line of Credit?
Commercial Mortgages?

Are you ...
Self Employed?
Temporary Resident?
New Immigrant?



Not to Worry!

Please Call
Theven Kankesu
Mortgage Agent, FSCO Lic# M08008759
416.939.8789
tvn28@hotmail.com
thevenk1.tk@gmail.com



**Basement For Rent**

ஸ்காபுறோவில் Mclevin Avenue and Tapscott Road சந்திப்புக்கு அருகாமையில் உள்ள வீடொன்றின் ஒரு அறை மற்றும் குளியல் அறை மற்றும் சமையல் பகுதி ஆகியவை கொண்ட முழுமையான Basement Apartment உடனடியாக வாடகைக்கு உண்டு. வாடகை பேசித்தீர்க்கலாம். விபரங்களுக்கு 416 299 4904



**Help Wanted**

Workers needed for renovation company. Must have experience in one of the following:

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
416-706-8160

# அரசியல் பழிவாங்கல் வேண்டாம் எமது தாயாரின் விடுதலைக்கு உதவுங்கள் என ஜனாதிபதியிடம் உதயகலாவின் மகள் உருக்கமாக வேண்டுகின்றார்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்



அரசியல் காரணங்களுக்காக சிறையில் இருக்கும் தனது தாயாரான தயாபரராஜ் உதயகலாவை அவரது உடல்நலம் கருதியும், சிறுவர்களான எமது நலன்கருதியும் சிறையிலிருந்து வெளியில் வருவதற்கான வாய்ப்பை ஜனாதிபதி ஏற்படுத்தி தரவேண்டும் என குறித்த பெண்ணின் மகள் டிலானி தயாபரராஜ் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் 21ம் திகதி திங்கட்கிழமை அன்று தனது பேத்தியாரான அருனோதயனாதன் ரஜனியுடன் ஊடக சந்திப்பை முன்னெடுத்த அவர் மேலும் கூறுகையில், சர்வமக்கள் கட்சியின் உருவாக்கத்தால் பிள்ளையானுடன் ஏற்பட்ட முரண்பாடுகளால் தந்து தாயார் தண்டனைக் கைதியாக சிறையில் இருக்கின்றார்.

எமது தாயார் அரசியல் சூழ்ச்சி காரணமாக சிறையில் இருப்பதால் நாம் நான்கு சகோதரர்களும் பாட்டியின் பராமரிப்பில் தற்போது பல அசௌகரியங்களை சந்தித்தி வருகின்றோம்.

இந்நேரம் சிறையிலிருக்கும் எமது தாயார் குற்றம் செய்யாது சிறையில் இருப்பதால் பல்வேறு உடல் உபாதைகளுக்கும் மன உளைச்சலுக்கும் உள்ளாகி மருத்துவ வசதி கூட கிடையாத நிலையில் இருக்கின்றார்.

இந்த நிலை அவரது உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்துவதாக இருக்கின்றது

அந்தவகையில் எமது குடும்ப நிலையையும் பிள்ளைகளான எமது நிலையையும் கருத்தில் கொண்டு தாயாரை மனிதாபிமானமான நடவடிக்கையாக விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் மூளைக் காய்ச்சலால் இளம் குடும்பப் பெண் உயிரிழப்பு!

மூளைக் காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணத்தில் இளம் குடும்பப் பெண் ஒருவர் 22-04-2025 அன்றையதினம் உயிரிழந்துள்ளார். இதன்போது தெல்லிப்பழை - வீமன்காமம் பகுதியை சேர்ந்த கவிந்தன் சாமினி (வயது 22) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், இவருக்கு கடந்த 14ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டது. இந்நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கடந்த 19ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் 22-04-2025 அன்றையதினம் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். மூளை காய்ச்சல் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.




# தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளரின் மகன் கைதுக்கு கஜேந்திர குமார் பொன்னம்பலம் கண்டனம்!

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வடமராட்சிக் கிழக்கு இணைப்பாளர் சற்குணா தேவியின் மகனை தேர்தல் விதிமுறைகளை மீறி 22-04-2025 அன்று மருதங்கேணி பொலிசார் கைது செய்துள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கயேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

தன்னுடைய உத்தியோகபூர்வ முகநூல் பதிவில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் உள்ள வடமராட்சி கிழக்குப் பகுதிக்கான மிழ் தேசிய மக்கள் முன்னணியின் அமைப்பின் அமைப்பாளராக ஜெகதீஸ்வரன் சற்குணாதேவி உள்ளார்.

அவர் பருத்தித்துறை பிரதேச சபைத் தேர்தலுக்கான வேட்பாளராகவும் இருந்தார், ஆனால் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன. சில நாட்களுக்கு முன்பு மருதங்கேணி காவல்துறையினரால் 22-04-2025 அன்று காலை ஏற்பாடு செய்யப்பட்ட வேட்பாளர்களுக்கான கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதால் அவர் செல்லவில்லை. சுமார் அரை மணி நேரத்திற்கு முன்பு போலீசார் அவரது வீட்டிற்கு வந்து ஏன் கலந்து கொள்ளவில்லை என்று கேட்டனர்.

அவர் இனி வேட்பாளர் இல்லை என்று கூறியபோது, கலந்து கொள்ளச் சொன்னால் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும் என்று கூறி அவரைத் திட்டினர், மேலும் எந்த காரணமும் கூறாமல் அவரது உடல்நிலை சரியில்லாத மகனைக் கைது செய்தனர்.

சற்குணாதேவியின் வலுவான மற்றும் ஊழலற்ற அரசியல் செயல்பாட்டிற்காக மருதங்கேணி காவல்துறையினரால் பலமுறை துன்புறுத்தப்பட்டுள்ளார். அவரது கணவர், மகன் மற்றும் எங்கள் கட்சியின் பிற உறுப்பினர்களை போலீசார் தொடர்ந்து பொய் வழக்குகளில் குறிவைத்து, பின்னர் விடுவிக்கப்பட்டதாக தனது முகநூல் பதிவில் தெரிவித்துள்ளார்.



# கனடா செல்வதற்கு நிதி வசதி இல்லாத காரணத்தால் யாழ்ப்பாணத்தில் இளைஞன் தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்பு!

கனடா செல்வதற்கு நிதி வசதி இல்லாத காரணத்தால் இளைஞன் ஒருவர் 22ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றையதினம் தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார். இவ்வாறு யாழ்ப்பாணம் - வைத்தியசாலை வீதி பகுதியை சேர்ந்த லிங்கேஸ்வரன் கிரிஸ்டியன் (வயது 30) என்பவரே உயிரிழந்துள்ள இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த நபர் கனடா செல்வதற்கு நீண்ட நாட்களாக திட்டமிட்டிருந்தார். இருப்பினும் நிதி வசதி இல்லாத காரணத்தால் யாழ்ப்பாணம் - ஆரியகுளம் பகுதிக்கு அருகில் உள்ள காணியில், மரத்தில் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார் உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# வட்டுக்கோட்டையில் மாணவனை மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்ற பெண்!



தரம் 7 இல் கல்வியிலும் பாடசாலை மாணவன் ஒருவரை மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் ஒருவர் மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்ற சம்பவம் ஒன்று வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் நடைபெற்றுள்ளது. குறித்த சம்பவம் 22.04.2025 காலை 7.30 மணியளவில் இடம்பெற்றது.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருகையில், சிவரூபன் லோஷனன் என்ற 12 வயதுடைய மாணவன் வழமை போன்று தனது துவிச்சக்கர வண்டியில் பாடசாலைக்கு சென்றுள்ளார். பாடசாலையின் அருகாமையில் குறித்த சிறுவன் சென்ற நிலையில் பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த பெண் ஒருவர் தன்னை மோதியதில் தான் துவிச்சக்கர வண்டியுடன் வீதியில் வழுந்ததாக சிறுவன் தெரிவித்தார்.

அத்துடன் விபத்தில் சிக்குண்டு காயங்களுடன் வீழ்ந்து கிடந்த தன்னை பெருட்படுத்தாது அந்தப் பெண் தனது மோட்டார் சைக்கிளில் தப்பி சென்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் வீழ்ந்துகிடந்த தன்னை தனது பாடசாலையின் முன்பாக வீதி கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த சிரேஸ்ட மாணவர்கள் ஓடிவந்து தூக்கி தனது நிலையை அவதானித்து பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு தெரியப்படுத்தியதாகவும் தெரிவித்த பாதிக்கப்பட்ட மாணவன், தனக்கு பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் உடனடியாக முதலுதவி சிகிச்சை அளித்து தனது பெற்றோருக்கு தகவல் வழங்கியதுடன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்ததாகவும் குறிப்பிட்டார்.

இதேநேரம் குறித்த விபத்தில் மாணவனின் கை முறிந்த நிலையில் சங்கானை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை விபத்தில் பாதிக்கப்பட்ட மாணவனை தனது மோட்டார் சைக்கிளால் மோதி காயப்படுத்திய பெண்ணைக் கைது செய்து நடவடிக்கை எடுக்க பாடசாலை நிர்வாகமோ அன்றி சமூக அக்கறை கொண்ட அமைப்புக்களோ முன்வரவில்லை என்பதை பாதிக்கப்பட்ட மாணவனின் பெற்றோர் முன்வைத்துள்ளார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனிடையே பாடசாலை ஆரம்பிக்கும் நேரம் மற்றும் நிறைவுறும் நேரங்களில் பொலிசார் வீதிக் கடமையில் வழமையாக இருந்துவரும் நிலையில் சில நாள்களாக அந்த செயற்பாடுகள் இல்லாதுள்ளமையை அவதானிக்க முடிவதாக மாணவர்களும் பொதுமக்களும் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பித்தக்கது.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் அனைவருக்கும் நீதி வழங்க கோரிக்கை

இலங்கை செய்திகள் Sri Lanka News



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரமல்ல, உள்நாட்டுப் போரின் போது தமிழ் பொதுமக்கள், கிளர்ச்சிகளின் போது சிங்கள இளைஞர்கள் மற்றும் பாகு-பாடு மற்றும் வன்முறையைச் சந்தித்த முஸ்லிம்கள் உட்பட அநீதிக்குள்ளான அனைத்து சமூகங்களுக்கும் நீதி வழங்கப்படுவதை உறுதி செய்யுமாறு முஸ்லிம் அமைப்புகள் கூட்டாக அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளன.

இலங்கையில் வன்முறைகளை தூண்டுவதும் தண்டனைகளின்றி விடுபடுவதும் மீண்டும் மீண்டும் வேரூன்ற காரணமாக உள்ள நிறுவனங்கள், கட்டமைப்புகள் மற்றும் அரசியல் கலாசாரம் என்பவற்றில் அர்த்தமுள்ள மாற்றங்களை ஏற்படுத்துமாறு பதினைந்து முஸ்லிம் அமைப்புகள், 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் ஆறாவது ஆண்டு நிறைவையொட்டி வெளியிட்டுள்ள கூட்டு அறிக்கையில் வலியுறுத்தியுள்ளன.

“ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமல்லாமல், தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியால் துயருற்றிருக்கும் நீண்ட உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் 1971, 1989ம் ஆண்டுகளில் இடம்பெற்ற கிளர்ச்சிகளால் பாதிக்கப்பட்ட சிங்கள இளைஞர்கள் மற்றும் அழுத்கம, ஜின்தோட்டை, திகன, மினுவாங்கொட போன்ற இடங்களில் நடந்த தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் அத்துடன் கோவிட்-19 காலத்தில் கட்டாய தகனம் செய்ததன் மூலம் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் என எல்லாம் சமூகங்களுக்கும் நீதி வழங்கப்பட வேண்டும். இதில் முழுமையான கரிசனை இல்லையெனில், நம்பிக்கையுடனும் முன்னோக்கியும் செல்லும் ஒரு தேசியத் தரமான கூட்டு முன்னேற்றப் பாதை என்றும் எட்டமுடியாத ஒன்றாகவே இருக்கும்.”

உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை நடந்த சம்பவங்கள் பயங்கரவாதச் செயல்கள் மாத்திரமல்ல, இஸ்லாத்தை அவதூறு செய்வதையும், முஸ்லிம் சமூகத்தை இழிவுபடுத்துவதையும், நோக்கமாகக் கொண்ட ஒரு பரந்த சதித்திட்டத்தின் ஒரு பகுதியாகும் எனக் குறிப்பிடும் குறித்த முஸ்லிம் அமைப்புகள், முழு உண்மையும் அம்பலப்படுத்தப்பட வேண்டும் எனவும், இதில் பலிக்கடாவாக உள்ளவர்களை விடுத்து உண்மையிலேயே பொறுப்பானவர்கள் - தாக்குதலின் சூத்திரதாரிகள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளன.

“தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமமாகும், தாக்குதல் நடந்து, ஆறு ஆண்டுகளுக்குப் பிறகும் உண்மையான குற்றவாளிகள் அடையாளம் காணப்படாமலும், தாக்குதல்களைச் சுற்றியுள்ள முக்கிய கேள்விகளுக்கு பதிலளிக்கப்படாமலும் இருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.”

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) கீழ் குற்றச்சாட்டுகள் அல்லது தண்டனைகள் இல்லாமல் முஸ்லிம் தனிநபர்கள் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்படுவது குறித்து முஸ்லிம் அமைப்புகள் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துகின்றன. இத்தகைய நடைமுறைகள் அவநம்பிக்கையையும் பயத்தையும் ஆழப்படுத்தியுள்ளன என்பதை வலியுறுத்துகின்றன.

தாமதமின்றி அனைத்து விசாரணைகளையும் வெளிப்படையான மற்றும் நம்பகமான முடிவுக்குக் கொண்டுவருமாறு இலங்கை அரசாங்கத்தை அந்த அமைப்புகள் கேட்டுக்கொண்டுள்ளன.

இந்த அறிக்கையை வெளியிட்ட 15 முஸ்லிம் அமைப்புகள், கூட்டு தண்டனைக்கு எதிராகவும், அதைத் தொடர்ந்து வந்த குழப்பமான காலங்களில் நீதிக்காக போராடிய கர்தினால் மால்கம் ரஞ்சித், கத்தோலிக்க திருச்சபை மற்றும் அனைத்து மத மற்றும் இனக் குழுக்களைச் சேர்ந்த தனிநபர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துள்ளதோடு, அவர்களது துணிச்சலும் ஒற்றுமையும் ஒருபோதும் மறக்கப்படக்கூடாதவை என வலியுறுத்தியுள்ளன.

“ஓரங்கட்டப்பட்ட குழுவாக அல்லாமல் இந்த நாட்டின் சமமான அந்தஸ்துடன் அறிவொளி பெற்ற சமூகமாக நாம் முன்னேற உறுதிபூண்டுள்ளோம். அனைத்து இலங்கையர்களும் பிரிவினை மற்றும் சந்தேகத்தையும், அவற்றை உருவாக்கும் வெளிப்புற மற்றும் உள் கூறுகளையும் நிராகரிக்கவும், சமூகங்களிடையே நம்பிக்கையை வளர்க்கவும், அமைதி, இரக்கம் மற்றும் உண்மையான தேசிய ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்ட எதிர்காலத்தை வடிவமைக்கவும் முன்வருமாரு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.”

கூட்டு அறிக்கையை வெளியிட்ட 15 முஸ்லிம் அமைப்புகள், பாதிக்கப்பட்டவர்களின் நினைவுகள் அதிக வெறுப்பு மற்றும் அநீதியால் மதிக்கப்படக்கூடாது எனவும், மாறாக உண்மை மேலோங்கி நிற்கும், நீதி நிலைநாட்டப்படும், மேலும் ஒவ்வொரு குடிமகனும் - இன மத பேதமின்றி - கண்ணியத்துடனும் சமத்துவத்துடனும் வாழக்கூடிய ஒரு நாடாக இலங்கை மாறுவதை உறுதி செய்வதன் மூலம் கௌரவிக்கப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளன.

ஏப்ரல் 21, 2019 அன்று பல தேவாலயங்கள் மற்றும் சுற்றுலா ஹோட்டல்களை குறிவைத்து நடத்தப்பட்ட தொடர் தற்கொலை குண்டுவெடிப்புகளில். கட்டுவாபிட்டியில் உள்ள புனித செபஸ்டியன் தேவாலயம், கொழும்பு-கொச்சிக்கடையில் உள்ள புனித அந்தோணியார் தேவாலயம் மற்றும் மட்டக்களப்பில் உள்ள சியோன் தேவாலயம் ஆகியன இலக்கு வைக்கப்பட்டன.

ஏப்ரல் 21, 2019 அன்று தெஹிவளை ஹோட்டல் மற்றும் கொழும்பில் உள்ள கிங்ஸ்பரி, ஷ்ரீங்க்ரி-லா மற்றும் சினமன் கிராண்ட் ஹோட்டல்கள் உட்பட பல இடங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகளில் 268 பேர் கொல்லப்பட்டதோடு 500ற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்ட 26வது இரத்த தான முகாம்!



கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையம், கருகம்பனை இந்து இளைஞர் கழகம், கருகம்பனை இந்து இளைஞர் விளையாட்டு கழகம் மற்றும் விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டம் ஆகியன, நாளைய அதிகாரத்தின் எழுச்சி அமைப்பின் அனுசரணையோடு முன்னெடுத்த 26வது மாபெரும் இரத்ததான முகாம் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்றையதினம் நடைபெற்றது.

கருகம்பனை கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்ற இந்த இரத்த தானமுகாமில் 43 குருதிக்கொடை பாளர்கள் குருதி வழங்கியிருந்தனர்.

இவ் குருதிச்சேகரிப்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இரத்த வங்கியினர் ஈடுபட்டனர். இதன் போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இரத்த வங்கி வைத்தியர் நந்தினி, பொது சுகாதார பரிசோதகர், தாதிய உத்தியோகத்தர்கள், சுகாதார உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.





இதன் போது குருதிக் கொடையாளர்கள், கிராமத்தவர்கள், விதையனத்தும் விருட்சமே உறுப்பினர்கள், நாளைய அதிகாரத்தின் எழுச்சி அமைப்பின் உறுப்பினர்கள், இராணுவத்தினர், பொலிஸ் உத்தியோகத்தர்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பாப்பரசரின் மறைவுக்கு சிறீதரன் எம்.பி இரங்கல்!

பரிசுத்த பாப்பரசரின் மறைவுக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் அனுப்பிவைத்துள்ள இரங்கற் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, கத்தோலிக்கத் திருச்சபையின் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் அடிகளாரின் மறைவு, உலகவாழ் மக்கள் ஒவ்வொருவரையும் ஆழ்ந்த கவலைக்கு உள்ளாக்கியிருக்கிறது.

கத்தோலிக்க மக்களின் திருத்தந்தை என்ற அடையாளத்தினூடே, தனது திருச்சபை மக்களைக் கடந்து மனுக்குலத்தின் மாட்சிமைக்கான அவரது எண்ணங்களின் மகத்துவத்தை, கொரோனாப் பெருந்தொற்று காலத்தில் அவர் ஆற்றிய மறையுரையின் சாரத்தில் நாம் அறிந்துகொள்ள முடியும்.

கருணையையும், மனிதநேயத்தையும், சமாதானத்தையும் விரும்பிய இந்த யுகத்தின் பேரடையாளமாக மறைந்த திருத்தந்தையின் காலமும், பணிகளும் இருந்திருக்கின்றன.

2013ஆம் ஆண்டு, ஏறத்தாழ இரண்டு இலட்சம் மக்களின் பங்கேற்போடு நடைபெற்ற மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அடிகளாரின் தலைமைப் பணி ஏற்புத் திருப்பலியில் “உலகத்தில் பொருளாதாரத் துறை, அரசியல் துறை, சமூகத் துறை ஆகியவற்றில் பொறுப்பான பதவியில் இருப்போர் அனைவரும் கடவுளின் படைப்புலகு குறித்து அக்கறை கொண்டிருக்க வேண்டும். உலகத் தலைவர்கள் சுற்றுச்சூழலையும், குழந்தைகளையும், முதியோர்களையும், துன்பத்தில் உழல்வோரையும் பாதுகாக்கக் கடமை கொண்டுள்ளார்கள்” என்றுரைத்த அவரது வார்த்தைகள் உலகை வழிநடத்தும் பரிவும், பக்குவமும் அவருக்கிருப்பதை அடையாளப்படுத்திற்று.

மதங்களைக் கடந்த மனிதநேயத்தின் அடையாளமாக, சமாதானத்தின் தூதுவனாக இறைபணி ஆற்றிய கத்தோலிக்க திருச்சபையின் திருந்தந்தை பிரான்சிஸ் அடிகளாரின் மறைவின் துயர்சுமந்த எமது மக்களோடு நானும் இணைந்திருக்கிறேன் - என்றுள்ளது.

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு!





இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கான தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

சபையின் மேனாள் தவிசாளரும், வேட்பாளருமான சுப்பிரமணியம் சுரேன் தலைமையில், 21-04-2025 அன்றையதினம் முள்ளிப்பற்று வட்டாரத்தில் நடைபெற்ற வேட்பாளர் அறிமுகக் கூட்டத்திலேயே தேர்தல் விஞ்ஞாபன வெளியீடு இடம்பெற்றுள்ளது.

இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன், கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைச் செயலாளர் வீரவாகு விஜயகுமார், கரைச்சி பிரதேச சபையின் மேனாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன், கட்சியின் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கான வேட்பாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.





# யாழ்ப்பாண யூடியூபர் கிருஷ்ணா பிணையில் விடுதலை!

யாழ்ப்பாணத்தில் யூடியூபர் கிருஷ்ணாவை பிணையில் செல்வதற்கு மல்லாகம் நீதிமன்றம் 23ம் திகதி புதன்கிழமை அன்றையதினம் அனுமதி வழங்கியது.

குறித்த யூடியூபர் சில்லாலை பகுதியில் உள்ள வீடு ஒன்றிற்கு சென்று அங்கிருந்த சிறுமி ஒருவரை ஏளனம் செய்யும் விதத்தில் பேசியதுடன், கட்டாயப்படுத்தி காணொளியும் எடுத்து தனது யூடியூப்பில் பதிவேற்றினார்.

குறித்த விடயமானது சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில் அவர் மீண்டும் சில்லாலைக்கு சென்றவேளை அங்கிருந்த இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைப்பட்டார். இந்நிலையில் விசாரணைகளை மேற்கொண்ட இளவாலை பொலிஸார் அவரை கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

இந்நிலையில் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டது. அந்தவகையில் அவரது விளக்கமறியல் திகதிகள் நிறைவுற்ற நிலையில் தொடர்ச்சியாக மூன்று தடவைகள் வழக்கு நீதிமன்றத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதும் அவருக்கு பிணை மறுக்கப்பட்டு தொடர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இவ்வாறான சூழ்நிலையில் 123ம் திகதி அன்றையதினம் விளக்கமறியல் திகதி நிறைவுற்றது. இந் நிலையில் மல்லாகம் நீதிமன்றத்தில் அவரை முற்படுத்தியவேளை ஆள் பிணையில் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதியளித்ததுடன் அடுத்த வழக்கு எதிர்வரும் 22.-05-2025 அன்று திகதியிடப்பட்டது.

# பாப்பரசரின் மறைவுக்குப் யாழ்ப்பாணம் செம்பியன் பற்று வடக்கிலும் துக்க நாள் அனுஸ்டிப்பு!






பரிசுத்த பாப்பரசரின் மறைவுக்கு யாழ் வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்று வடக்கு பகுதி மக்கள் துக்க நாள் அனுஸ்டித்து வருகின்றனர்.

செம்பியன் பற்று வடக்கு வரலாற்று சிறப்புமிக்க புனித பிலிப்பு நேரியார் ஆலய பங்கு மக்கள் தமது திருத்தந்தையின் இழப்பின் கவலையினை வெளிப்படுத்தும் முகமாக ஆலய வாசலில் கறுப்பு கொடி கட்டி மற்றும் ஆலய முன்றலில் பாப்பரசரின் இழப்புக்கான பதாகைகள் கட்டி தமது துக்கத்தினை வெளிப்படுத்தி உள்ளனர்.

இது சம்பந்தமாக ஆலய பங்கு மக்களை கேள்வி கேட்ட போது மக்கள் கத்தோலிக்கத் திருச்சபையின் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் அடிகளாரின் மறைவு, உலகவாழ் மக்கள் ஒவ்வொருவரையும் ஆழ்ந்த கவலைக்கு உள்ளாக்கியிருக்கிறது.

எனவும் இவ் இழப்பினை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனவும் தாங்கள் இப்போது ஆயன் இல்லா ஆடுகளை போல உள்ளதாகவும் அடுத்த பாப்பரசரின் தெரிவினை மிகவும் ஆர்வமாக காத்திருக்கிறோம் எனவும் தமது கவலையினை தெரிவித்துள்ளனர்.



# தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி வரையிலான பாக் ஜலசந்தி கடலை ஒற்றை காலுடன் நீந்தி கடந்து சாதித்த மாற்றுத்திறனாளியான நீச்சல் வீராங்கனை சஷ்ருதி நக்காது

**- மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட் (19-04-2025)**

இயலாமைக்கும் சாதனைக்கும் உள்ள தூரத்தை நீந்தி கடந்து சாதனை படைக்க வேண்டும் என்ற லட்சியத்துடன் ஒரு காலை இழந்த மாற்றுத்திறனாளி நீச்சல் வீராங்கனை இலங்கை தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரையிலான பாக் ஜலசந்தி கடலை 11 மணி 05 நிமிடத்தில் நீந்தி கடந்து சாதனை படைத்துள்ளார்.

பாக் ஜலசந்தி கடல் பகுதி தமிழகத்தையும் இலங்கையையும் பிரிக்கும் நீரிணை ஆகும். ராமேஸ்வரம் தீவும், அதை தொடர்ந்துள்ள 13 மணல் தீடைகளும், பாக் ஜலசந்தி கடற்பகுதியை மன்னார் வளைகுடாவில் இருந்தும் பிரிக்கிறது. தமிழகத்திலேயே மிகவும் ஆழம் குறைந்த அதே சமயம் பாறைகளும் ஆபத்தான ஜெல்லி மீன்கள் நிறைந்த கடல் பகுதியாகும்.

இதுவரை 30க்கும் மேற்பட்டோர் பாக் ஜலசந்தியை தனியாக நீந்தி கடந்து சாதனை புரிந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் இலங்கையின் தலைமன்னாரிலிருந்து இந்தியாவின் தனுஷ் கோடிக்கோ அல்லது தனுஷ்கோடியில் இருந்து தலைமன்னாருக்கு நீந்திச் சென்றவர்கள். இது தவிர மேலும் சிலர் குழுவாக ரிலே மற்றும் மாரத்தான் முறையில் பாக் ஜலசந்தி கடலை நீந்தி கடந்துள்ளனர்.

இந்நிலையில் தலைமன்னார் இருந்து தனுஷ்கோடிக்கு நீந்தி கடப்பதற்காக கர்நாடகா, மகாராஷ்டிரா உள்ளிட்ட வட மாநிலத்தை சேர்ந்த 10 பேர் கொண்ட நீச்சல் வீரர்கள் குழு இந்திய-இலங்கை இரு நாட்டு அரசிடமும் அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தார்.

அனுமதி கிடைத்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை 18ம் திகதி ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து ஆழ்கடல் படகில் இலங்கை தலைமன்னார் நோக்கி சென்றனர்.

இந்த குழுவில் 8 பேர் ரிலே முறையில் நீந்தினர். இவர்கள் இலங்கை தலைமன்னாரில் இருந்து அதிகாலை 5.50க்கு கடலில் குதித்து நீந்த தொடங்கி மதியம் 2.20 மணி அளவில் தனுஷ்கோடி வந்தடைந்தனர். இவர்கள் ரிலே முறையில் தலைமன்னார் முதல் தனுஷ்கோடி வரை 8 மணி நேரம் 30 நிமிடத்தில் நீந்தி கடந்தனர்.

மேலும் இருவர் தனியாக (SOLO) நீந்தி கடந்தனர். இவர்கள் இருவரும் மாற்றுத்திறனாளிகள். இதில் மகாராஷ்டிரா மாநிலத்தை சேர்ந்த சஷ்ருதி நக்காது என்ற நீச்சல் வீராங்கனைக்கு வலது காலில் பிறவி குறைபாடு காரணமாக மேல் மூட்டு துண்டிக்கப்பட்டு, செயற்கையாக வடிவமைக்கப்பட்ட காலை கொண்டு நடக்கும் மாற்றுத்திறனாளி.

இவர் முன்னதாக பாரா நீச்சல் போட்டிகளில் கலந்து கொண்டு மூன்று பதக்கங்களை பெற்றுள்ள சஷ்ருதி நக்காது இயலாமைக்கும் சாதனைக்கும் உள்ள தூரத்தை நீந்தி கடந்து சாதனை படைக்க வேண்டும் என இலங்கையிலுள்ள தலைமன்னாரில் இருந்து இந்தியாவில் உள்ள தனுஷ்கோடி வரையிலான பாக் ஜலசந்தி கடலை நீந்தி சாதனை புரிவதற்காக வெள்ளிக்கிழமை அதிகாலை 5.50 மணி அளவில் தலைமன்னாரில் இருந்து கடலில் குதித்து நீந்த தொடங்கி மாலை 4.55 மணியளவில் தனுஷ்கோடி அரிச்சல்முனை கரையை அடைந்தார். இந்த சாதனைக்காக 11 மணி 05 நிமிடங்கள் சஷ்ருதி நக்காது எடுத்துக் கொண்டார்.

அரிச்சல்முனை வந்தடைந்த சஷ்ருதி நக்காதவை அவரது தாய் கண்ணீர் மல்ல முத்தமிட்டு வரவேற்றார். அதனை தொடர்ந்து சுங்கதுறை கண்காணிப்பாளர், மரைன் போலீசார் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

அதே போல மற்றொருவரான மாற்றுத்திறனாளி பல்கா கணேஷ் தலைமன்னார் முதல் தனுஷ்கோடி அரிச்சல்முனை வரை 10 மணி 30 நிமிடத்தில் நீந்தி கடந்தார்.

மாற்றுத்திறனாளியான பாரா நீச்சல் வீராங்கனை தலைமன்னாரில் இருந்து அதிகாலை கடலில் குதித்து நீந்த தொடங்கிய போது ஜெல்லி மீன் மற்றும் கடல் நீரோட்டம் காரணமாக தொடர்ந்து நீந்துவதில் கடும் சிரமம் ஏற்பட்டது.

இருப்பினும் கடும் சிரமத்தை எதிர் கொண்டு தனுஷ்கோடி அரிச்சல்முனை கரையை அடைந்து சஷ்ருதி நக்காது சாதனை படைத்துள்ளார்.

ஒற்றைக் காலுடன் கடலில் நீந்திக் கடப்பது என்பது மிகவும் சவாலான விஷயம். முன்னதாக ஆட்டிசம் பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் தலைமன்னார் முதல் தனுஷ்கோடி வரை நீந்தி கடந்து சாதனை படைத்த நிலையில் தற்போது ஒரு காலை இழந்த மாற்றுத்திறனாளி முதல் முறையாக தலைமன்னார் தனுஷ்கோடி பாக்நீரிணையை நீந்தி கடந்து சாதனை படைத்துள்ளதாக இந்திய நீச்சல் கழகத்தின் பார்வையாளர் விஜயகுமார் தெரிவித்துள்ளார்.




# Thana Insurance Inc

## T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

## PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

## NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

இலங்கை செய்திகள்
Sri Lanka News

புு. கஜிந்தன்

# காலச் சூழலுக்கு ஏற்ப பயணிக்கும் தமிழ் தேசிய பேரவைக்கே எமது ஆதரவு என யாழ். முஸ்லிம் மக்கள் ஒன்றியம் அறிவிப்பு!




தேசிய மக்கள் சக்தியின் பொறிக்குள் வீழாது காலச் சூழலுக்கு ஏற்ப தமிழ் தேசியப் பரப்பில் பயணிக்கும் கட்சிகளுடன் ஒன்றிணைந்து. பயணிக்கும் நோக்கில் இம்முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழ் தேசிய பேரவைக்கு ஆதரவை வழங்கவுள்ளதாக யாழ்.முஸ்லிம் மக்கள் ஒன்றியம் தலைவர் அப்துல் பரீக் ஆரீப் தெரிவித்துள்ளர்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் பேரவைக்கு ஆதரவு வழங்கும் அறிவிப்பை விடுத்திருந்த யாழ்.முஸ்லிம் மக்கள் ஒன்றியம் அது தொடர்பில் ஊடக சந்திப்பொன்றை 23.05.2025 அன்றையதினம் யாழ் ஊடக மையத்தில் மேற்கொண்டு இவ்வாறு கூறியிருந்ததுடன் மேலும் கூறுகையில், அகில இலங்கை தமிழ் காங்கிரசுடன் யாழ் முஸ்லிம் மக்களுக்கு நெருங்கிய தொடர்பும் நட்பும் இருந்துவருகின்றது.

அதுமட்டுமல்லாது கொள்கையில் தடுமாறா நிலையுடன் பயணிக்கும் கஜேந்திரகுமார் தலைமையிலான கட்சி எமது மக்களின் நலன்களில் அதிக அக்கறையுடன் பயணித்து வருகின்றது.

இவ்வாறான நிலையில் காலத்தின் சூழ்நிலைக்கேற்ப கொள்கையுடன் தமிழ் தேசிய பேரவை இருக்கின்றது.

அதனடிப்படையில் இம்முறை நடைபெறும் உள்ளூராட்சி தேர்தலில் எமது அமைப்பின் ஆதரவை தமிழ் தேசிய பேரவைக்கு வழங்குவதற்கு தாம் தீர்மானித்துள்ளதாக தெரிவித்த அவர் தமது முஸ்லிம் மக்கள் ஓரணியில் திரண்டு ஆதரவை வழங்கவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த ஊடக சந்திப்பின் போது யாழ்.முஸ்லிம் மக்கள் ஒன்றியத்தின் உறுப்பினர் ஆ.ளு.ரஹீம் உடனிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் காய்ச்சல் காரணமாக 5 மாதங்கள் நிரம்பிய பெண் குழந்தை உயிரிழப்பு!

யாழ்ப்பாணத்தில் பிறந்து 5 மாதங்களேயான பெண் குழந்தை ஒன்று காய்ச்சல் காரணமாக 22ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றையதினம் உயிரிழந்துள்ளது. உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த தரின் பவிசா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த குழந்தைக்கு நேற்றையதினம் காய்ச்சல் ஏற்பட்டது. இந்நிலையில் குழந்தைக்கு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டது.

குழந்தைக்கு காய்ச்சல் குணமாகாத நிலையில் 22ம் திகதி அன்றையதினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு குழந்தையை கொண்டு சென்று சிகிச்சையளிக்கப்பட்டது. இருப்பினும் சிகிச்சை பலனின்றி அன்று மாலை குழந்தை உயிரிழந்தது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.



# என்.பி.பி அரசு சட்டவிரோத கட்டடங்களை சட்டரீதியாக மாற்றும் அபாயம் ஏற்படலாம் என எச்சரிக்கிறார் மயூரன் !

என்.பி.பிக்கு வாக்களிப்பதன் மூலம் சட்டவிரோதமான தையிட்டி திஸ்ஸ விஹாரையை சட்ட ரீதியான விகாரையாக மாற்றக்கூடிய சூழ்நிலை உள்ளதாக, சங்கு சின்னத்தில், யாழ்ப்பாணம் மாநகர சபையில் போட்டியிடும் ஐக்கிய தமிழர் ஒன்றியத்தின் வேட்பாளர் திரு.மதுரகன் தெரிவித்துள்ளார்.

22ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றையதினம் யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

என்.பி.பியின் வருகையால் தமிழ் மக்கள் அனைவரும் விழிப்பாக இருக்கவேண்டிய சூழ்நிலை காணப்படுகிறது. ஏற்கனவே எமது மக்கள் பெருவாரியான வாக்குகளை வழங்கி ஆளும் கட்சியில் 3 எம்.பிகளை தெரிவு செய்து அரசுக்கு வலுவை வழங்கியுள்ளனர். இவ்வாறு இருந்தும் இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கு என்ன செய்தது?

பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குவதாக கூறி ஆட்சிக்கு வந்தார்கள் ஆனால் பயங்கரவாத தடைச் சட்டமானது இன்னமும் நீக்கப்படவில்லை. ஏன் அதனை நீக்கவில்லை?

கடந்த 17ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஜனாதிபதியின் தலைமையில் கூட்டத்தில், தமக்கு ஆதரவை வழங்கி தம்மை வலுப்படுத்துமாறும், அவ்வாறு வலுப்படுத்தினால் தான் தாங்கள் வடக்கு - கிழக்கிற்கு அபிவிருத்திகளை செய்ய முடியும் என்று ஜனாதிபதி கூறுகின்றார். ஏற்கனவே நாங்கள் ஆதரவு வழங்கி 3 பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்தோம் அதற்கு நீங்கள் என்ன செய்தீர்கள்?

தையிட்டி விகாரையானது தனியார் நிலத்தில் சட்டவிரோதமாக கட்டப்பட்ட கட்டடம் ஆகும். அந்த சட்டவிரோத கட்டடத்தை ஏன் இந்த என்.பி.பி அரசாங்கம் இன்னமும் அகற்றவில்லை? மீண்டும் உள்ளூராட்சி மன்ற தேர்தலிலும் ஆதரவு வழங்கினால் அவர்கள் உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றி சட்டவிரோத கட்டடங்களை சட்டரீதியான கட்டடங்களாக மாற்றுவதற்கு அனுமதிகளை வழங்குவார்கள்.

என்.பி.பிக்கு வாக்களித்தால் இன்னும் சிறிது காலத்தில் தமிழ் மக்கள் வாழ்ந்த சுவடுகளையே இல்லாமல் ஆக்குவதற்கு இந்த என்.பி.பி அரசாங்கம் வழி வகுக்கும் என்றார்.



# மக்களை அலைக்கழிக்கும் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கு எதிராக வடக்கு மாகாண ஆளுநர் நடவடிக்கை!

ஒரு சில உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் மக்களை அலைக்கழிப்பதை - பழிவாங்குவதை நிறுத்தாவிடின் எதிர்காலத்தில் அவர்களுக்கு எதிராக விசாரணைகளை முன்னெடுத்து தண்டனையை வழங்குவதைத்தவிர வேறுவழியில்லை என வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் எச்சரிக்கைவிடுத்தார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுடனான ஏப்ரல் மாதத்துக்கான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் கடந்த புதன்கிழமை (23.04.2025) இடம்பெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், தொடர்ச்சியாக கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றபோதும் இங்கு எடுக்கப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது மந்தமாக இருக்கின்றது. இதற்கும் அப்பால் சில உள்ளூராட்சி மன்றங்களின் செயலர்கள் தொடர்பில் மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன. மக்களை தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே பதவிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதனை மறந்து சில உள்ளூராட்சி மன்றங்கள் செயற்படுகின்றன. உள்ளூராட்சி மன்றங்கள் சிலவற்றின் செயலர்கள் இழைக்கின்ற தவறுகளால் ஒட்டுமொத்தமாக எல்லோருக்குமே பாதிப்பு ஏற்படுகின்றது. எமது நிர்வாகக் கட்டமைப்பிலிருக்கின்ற இவர்களின் தவறுகளுக்காக பாதிக்கப்பட்ட மக்களிடம் எனது மனவருத்தத்தை வெளிப்படுத்தியிருக்கிறேன். முன்னைய ஆட்சிக் காலங்களில் எமது மாகாணத்தில் முதலீடு செய்வதற்கு முன்வந்த பலர் பல்வேறு காரணங்களால் குறிப்பாக இலஞ்சம் கோரியமையால் திரும்பிச் சென்றனர். அவர்கள் இப்போதும் மீண்டும் வருகின்றனர். அவர்களுக்குரிய ஒழுங்குகளை நேரிய சிந்தனையுடன் அதிகாரிகள் செய்துகொடுக்கவேண்டும், என்று குறிப்பிட்டார்.

கடந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட விடயங்களின் முன்னேற்றம் தொடர்பில் ஆளுநர் இதன் பின்னர் ஆராய்ந்தார். விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான 10 சதவீதக் கழிவு தொடர்பான விவகாரத்தில் ஒவ்வொரு சந்தையாக நடவடிக்கை எடுக்க தீர்மானித்திருப்பதாக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் குறிப்பிட்டார். அந்தச் சந்தையுடன் தொடர்புடைய விவசாய அமைப்புக்களை முதல் கட்டமாக சந்திக்கவுள்ளதாகத் தெரிவித்தார். வீதிகளில் குப்பைகள் போடும் செயற்பாடு தொடர்கின்ற நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு சி.சி.ரி.வி. கமெராக்களை பொருத்துவதற்கான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்குமாறு ஆளுநர் அறிவுறுத்தினர்.

சட்டவிரோத கட்டடங்களுக்கு எதிராக உள்ளூராட்சிமன்றங்களின் செயலர்கள் நடவடிக்கை எடுப்பதற்கு தயக்கம் காண்பிக்கும் நிலைமை காணப்படுவதாக ஆளுநர் குறிப்பிட்டார். கடந்த காலங்களில் சட்டவிரோத கட்டுமானங்களை உள்ளூராட்சி மன்றங்கள் நேரடியாக இடித்தழிக்கக் கூடியதாக இருந்ததாகவும் தற்போது நகர அபிவிருத்தி அதிகார சபையின் கட்டுப்பாட்டினுள் உள்ளமையால் தம்மால் வழக்குத் தாக்கல் செய்யக் கூடியதே ஒரே வழி எனக் குறிப்பிட்டனர். இதன்போது தொடரப்பட்ட பல வழக்குகள் நீண்ட காலமாக நிலுவையில் உள்ளதாகவும் உள்ளூராட்சி மன்றங்களின் செயலர்கள் தெரிவித்தனர். குறிப்பாக யாழ். மாநகர சபையால் சட்டவிரோத கட்டடங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு பின்னர் யாழ். மாநகர சபையாலேயே வழக்கு மீளப் பெறப்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன என ஆணையாளர் குறிப்பிட்டார். அவ்வாறு மீளப்பெறப்பட்ட வழக்குகள் தொடர்பில் தனித்தனியாக ஆராய்ந்து மீளவும் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் குறிப்பிட்டார். அதேபோல வெள்ளவாய்க்கால்களை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள கட்டடங்கள் சட்டவிரோதமானவையே. அதனை அகற்றுவதற்கான தொடர் நடவடிக்கை உள்ளூராட்சி மன்றங்களால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் ஆளுநர் அறிவுறுத்தினார். மேலும், இந்த விடயங்களில் உள்ளூராட்சி மன்றங்களால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என ஆளுநர் சுட்டிக்காட்டினார். மரம் நடுகையை ஒவ்வொரு உள்ளூராட்சிமன்றங்களும் ஊக்குவித்து செயற்படுத்தப்பட வேண்டும் எனவும் ஆளுநர் வலியுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து வடக்கின் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் கட்டட அனுமதி, ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் அவற்றில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை என்பன தொடர்பில் ஆராயப்பட்டன. இவற்றுக்கான அனுமதி வழங்குவதில் உள்ள தாமதங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. அவற்றைக் களைவதற்கு தொடர்புடைய திணைக்களங்களை எதிர்காலத்தில் அழைத்து ஆராயவும் தீர்மானிக்கப்பட்டது.

வவுனியா நகர சபை மாநகர சபையாக தரம் உயர்த்தப்பட்டுள்ள நிலையில் அதற்குரிய ஆளணிகள் வழங்குவது மற்றும் கட்டடங்கள் அமைப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

மேலும், வீதிப் போக்குவரத்துத் தொடர்பில் கடந்த கூட்டத்தில் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியிருந்த நிலையில் அது தொடர்பில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக உள்ளூராட்சிமன்றங்களின் செயலர்கள் தெரிவித்தனர். அதேபோல நகர அபிவிருத்தி அதிகார சபையுடனான விவகாரங்களிலும் முன்னேற்றம் உள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் மூத்த உதவிச் செயலாளர், ஒவ்வொரு மாவட்டங்களினதும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் பங்கேற்றனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்களுடன் முரண்பட்ட மாங்குளம் பொலிஸாருக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பம்!



## வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நடவடிக்கை



யாழ்ப்பாணத்திலிருந்து இருந்து வவுனியா நோக்கி சென்ற இளைஞர் குழுவினருடன் முரண்பட்டு, அவர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்ட மங்குளம் பொலிஸார் இருவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் தனபால தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த இளைஞர் குழுவினர் யாழ்ப்பாணத்திலிருந்து கடந்த 22ஆம் திகதி வவுனியா நோக்கி காரில் பயணித்தனர். இந்நிலையில் அந்த இளைர்களை மாங்குளம் பொலிஸார் வழி மறித்தனர். வழி மறிக்கும் போது டோர்ச் லைட் வெளிச்சத்தை கண்ணில் பாய்ச்சியே வழி மறித்தனர்.

இந்நிலையில் இவ்வாறு வழி மறிப்பது தவறு என அந்த இளைஞர் குழு எடுத்து கூறியபோது அவர்களுடன் பொலிஸார் முரண்பாட்டில் ஈடுபட்டதுடன், அச்சுறுத்தினர். அத்துடன் தகட்டு இலக்கத்தையும் வழங்க மறுத்ததுடன், அராஜகத்தில் ஈடுபட்டனர்.

இந்த சம்பவத்தை அந்த இளைஞர் குழுவினர் ஊடகங்கள் ஊடாக வெளிக்கொண்டு வந்திருந்த நிலையில் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் தனபாலவின் கவனத்துக்கும் கொண்டு சென்றனர். இந்நிலையில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவருக்கும் எதிராக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் தனபால தெரிவித்துள்ளார்.

# தேசிய மக்கள் சக்தியின் கைகளுக்கு உள்ளூராட்சி அதிகாரம் சென்றால் சட்ட விரோத ஆக்கிரமிப்புக்களுக்கே வழியமைக்கும் என எச்சரிக்கிறார் சுரேன்!



தமிழ் மக்களை மீண்டும் ஒரு முறை ஏமாற்ற துடிக்கும் தேசிய மக்கள் சக்தியிடம் உள்ளூராட்சி மன்ற அதிகாரங்கள் செல்லுமாயின் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் அனைத்து ஆக்கிரமிப்பு செயற்பாடுகளும் சட்ட ரீதியாக மாற்றப்படும் சூழலை தமிழ் மக்கள் கண்கூடாக பார்க்க வேண்டிய துப்பாக்கிய நிலை ஏற்படும் என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வடமாகாண அமைப்பாளரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் பேச்சாளருமான சுரேன் குருசாமி எச்சரிக்கை விடுத்தார்.

20ம் திகதி அன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமை காரியாலயத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் 9 உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில் அவற்றை ஏற்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் தனது தீர்ப்பின் மூலம் உறுதிப்படுத்தியுள்ளது.

எமது கூட்டமைப்பின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை திட்டமிட்ட ஒரு செயற்பாடாகவே நாங்கள் பார்க்கின்ற நிலையில் அதற்கு எதிராக நீதிமன்றம் சென்று தீர்வை பெற்றுள்ளோம்.

உள்ளூர் ஆட்சி மன்ற தேர்தலுக்காக சங்க சின்னத்தில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி பரந்துபட்ட கூட்டணி ஒன்றை அமைத்துள்ள நிலையில் ஜனாதிபதி தேர்தலில் சங்க சின்னத்துக்கு மக்கள் வழங்கிய பேர் ஆதரவை உள்ளூர் ஆட்சி மன்ற தேர்தலிலும் வழங்குவார்கள்.

தேசிய மக்கள் சக்தியினர் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களிடம் தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்று தருகிறோம் அரசியல் கைதிகளை விடுவிக்கிறோம் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குகிறோம் மற்றும் படைகளிடம் உள்ள மக்கள் காணிகளை விடுவித்துத் தருகிறோம் என வாக்குறுதிகளை அள்ளி வழங்கி மூன்று ஆசனங்களை பெற்றார்கள்.

ஆனால் ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்கள் கடக்கின்ற நிலையில் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவுமில்லை பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படவில்லை பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்படவில்லை.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்பு பலாலி வீதியை மட்டும் நேர அட்டவணை விதித்து திறந்திருக்கிறார்கள்.

இந்த அரசாங்கத்தினுடைய செயல்பாடுகளை தமிழ் மக்கள் வெறுக்க ஆரம்பித்து உள்ள அவர்களை உள்ளூர் ஆட்சி மன்றங்களிலிருந்து தமிழ் மக்கள் விரட்ட வேண்டும்.

ஏனெனில் தமிழர் பகுதிகளில் சட்ட விரோத விகாரங்கள் அமைக்கப்பட்டு வருகிறது மக்களுடைய நிலங்கள் தொடர்ந்தும் கையகப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது இவற்றையெல்லாம் தடுப்பதற்கு உள்ளூராட்சி மன்ற அதிகாரங்கள் எங்களிடம் இருக்க வேண்டும்.

மாறாக உள்ளூராட்சி மன்ற அதிகாரங்கள் தேசிய மக்கள் சக்தி இடம் செல்லுமாயின் சட்டவிரோத தையிட்டி விகாரை அமைக்கப்பட்டது சரிதான் என்று பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றுவார்கள்.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜீவன் ஜெயச்சந்திர மூர்த்தி தமக்கும் தையிட்டி விகாரைக்கும் சம்பந்தமில்லை என பிரச்சாரம் செய்து வருகிறார்.

அவரிடம் நான் கேட்கிறேன் தையிட்டி விகாரை சட்டவிரோத விகார என பலரும் ஏற்றுக் கொண்டுள்ள நிலையில் அந்த விகாரைக்குள் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் கடந்த மாதம் புதிதாக தியான மண்டபம் பெரும் எடுப்பில் திறந்து வைக்கப்பட்டதற்கு பதில் கூற முடியுமா.

சிங்கள தேசியவாதத்தை தமிழர் பகுதிகளில் விதைப்பதற்காக விலை பேசப்பட்ட சிலர் நாம் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கிறோம் என கூறிக் கொண்டு தமிழ் தேசியத்தை முற்றாக சிதைப்பதற்கான வேலை திட்டங்களில் இறங்கியுள்ளனர்.

அதன் ஒரு அங்கமாகவே உள்ளூர் ஆட்சி மன்ற அதிகாரங்களையும் கைப்பற்றி விட்டால் தமிழ் மக்கள் தமிழ் தேசியமாக பேரம் பேச முடியாத தமிழ் மக்களின் அடிமட்ட அரசியல் இலக்கான உள்ளூர் ஆட்சி மன்றங்களையும் அடிபணிய வைப்பதே அவர்களின் நோக்கம்.

தமிழ் மக்கள் நன்கு சிந்திக்க வேண்டும் சிங்கள தேசியவாதம் எவ்வாறு தமிழ் மக்களை மலினப்படுத்த முடியுமோ அந்த அளவு தூரத்துக்கு நுட்பமாக இறங்கி தமிழ் மக்களின் வாக்குகளை கைப்பற்றிக் கொள்வதற்கான பாரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆகவே தமிழ் மக்கள் கடந்த தேர்தலில் சங்குச் சின்னத்துக்கு வழங்கிய பேராதரவை இம்முறை உள்ளூர் ஆட்சி மன்ற தேர்தலிலும் வழங்கி தமிழ் மக்களின் இலக்குகளை அடைய முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுமாயின் அவை தொடர்பாக நீதித்துறையே நடவடிக்கை எடுக்க வேண்டும் தவிர அரசியல்வாதிகள் அல்ல — என்கிறார் டக்ளஸ்!



அரசியல் நலன்களுக்காக தேர்தல் மேடைகளிலும், ஊடகங்களி மற்றும் சமூக ஊடகங்களிலும் அரசியல் செயற்பாட்டாளர்களின் கைதுகள் தொடர்பாக பேசப்படுவதை சுட்டிக்காட்டிய செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, யாருக்கு எதிராகவேனும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுமாயின் அவை தொடர்பாக நீதிமன்றங்களும் நீதிக் கட்டமைப்புக்களும் நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர அரசியல்வாதிகள் அல்ல எனவும் தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள தேர்தல் ஆணைக்குழு தலைமையகத்தில் இன்று நடைபெற்ற கட்சி தலைவர்களுக்கு இடையிலான சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துக்களை வெளியிட்ட செயலாளர் நாயகம் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் நாடெங்கிலும் ஒரே நாளில் நடத்தப்படாமல், சிலவற்றுக்கான தேர்தல் திகதி ஒத்திவைக்கப்படுமாயின், முதலில் நடைபெறுகின்ற பிரதேசங்களின் தேர்தல் முடிவுகள், பின்னர் நடத்தப்படும் தேர்தல் முடிவுகளில் தாக்கத்தினை செலுத்தும் எனத் தெரிவித்துடன், குறித்த விடயங்கள் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு கவனத்தில் எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.





# கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு!

"விதையனைத்தும் விருப்பமே" செயற்றிட்டம் ஊடாக ஜேர்மனி நாட்டில் வசிக்கும் கிறிஸ்டோபர் செல்வஸ்டீபன் அவர்களின் 23வது பிறந்தநாளை முன்னிட்டு 23ம் திகதி புதன்கிழமை அன்றையதினம் மலரும் மூளாய் அமைப்பினரினால் தெரிவு செய்யப்பட்ட கற்றல் மற்றும் விளையாட்டு துறையில் சிறந்த விளங்குகின்ற வறிய மாணவர்கள் 15 பேருக்கு சப்பாத்துகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி விக்னராசா கலந்து கொண்டு மேற்குறித்த உதவித் திட்டத்தில் அடங்கும் பொருட்களை வழங்கினார்.



# தமிழ்த் தேசியக் கட்சிகள் எப்படி என்.பி.பியை எதிர்கொள்ளப் போகின்றன?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

**பி**ரதமர் ஹரிணி தேர்தல் பிரச்சாரத்துக்காக நெடுங்கனிக்கு வர இருந்த பின்னணியில் அங்கே ஊரில் அவரை வரவேற்கும் பதாகைகள் கட்டப்பட்டன. இந்தப் பதாதைகளைக் கட்டியவர்களில் ஒருவர் புனர்வாழ்வு பெற்ற முன்னால் இயக்கத்தவர் என்றும் மற்றவர் ஒதிய மலை இன அழிப்புச் சம்பவத்தில் கொல்லப்பட்டவரின் பிள்ளை என்றும் ஒரு குறிப்பை அப்பகுதிக்கான தமிழ்த் தேசியக் கட்சி ஒன்றின் முக்கியஸ்தர் முகநூலில் பதிவிட்டிருந்தார்.

இத் தகவல் உண்மையா பொய்யா என்று தெரியவில்லை. ஆனால் அந்த இரண்டு பேர்கள் மட்டுமல்ல அவர்களைப் போல பல முன்னாள் இயக்கத்தவர்கள், முன்பு தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு ஆதரவாக இருந்தவர்கள், குறிப்பாக புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளிடம் நிதி உதவி பெற்று படித்தவர்கள், இப்படிப்பட்ட பலரும் இப்பொழுது தேசிய மக்கள் கட்சியின் ஆதரவாளர்களாக மாறியிருக்கிறார்கள்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்களில் கிட்டத்தட்ட 15க்கும் குறையாதவர்கள் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பு தேசிய மக்கள் கட்சியை ஆதரித்து ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தார்கள். ஆனால் அந்த அறிக்கையில் அவர்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதனை மறைமுகமாகத்தான் சுட்டியிருந்தார்கள். வெளிப்படையாக தேசிய மக்கள் சக்திக்கு வாக்களியுங்கள் என்று கூற அவர்கள் தயங்கினார்கள். ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த வெற்றி நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த வெற்றி என்பவற்றின் பின்னணியில் அவர்கள் இப்பொழுது பகிரங்கமாக தேசிய மக்கள் கட்சியை ஆதரிப்பது மட்டுமல்ல, அவர்களில் சிலர் பிரச்சார மேடைகளிலும் தோன்றுகிறார்கள்.

அவர்களில் ஒருவர் யாழ்.மாநகர சபையின் முதன்மை வேட்பாளர். மற்றொருவர் மொழிபெயர்ப்பாளராக ஏற்கனவே சமூகத்தில் நன்கு அறிமுகமானவர். குறிப்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட மானுடத்தின் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் அவர் தமிழ் - சிங்கள; சிங்கள - தமிழ் மொழிபெயர்ப்பாளராக செயற்பட்டவர். தமிழ்த் தேசிய அரசியல் சமூகத்துக்குள்ளும் இலக்கிய வட்டாரத்துக்குள்ளும் நன்கு தெரியவந்த ஒருவர். அவர் அனுர குமாரவின் இளமைக்கால நண்பர்களில் ஒருவர். இப்பொழுது பகிரங்கமாக என்பிபிக்கு ஆதரவாக வேலை செய்கிறார். அண்மையில் கடந்த வாரம் கிட்டு பூங்காவில் நடந்த பொதுக் கூட்டத்தில் அவர் அனுரவின் மொழிபெயர்ப்பாளராக வந்திருந்தார்.

இத்தனைக்கும் யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்டவர்களும் தமிழ் தேசிய நிலைப்பாட்டுக்கு ஆதரவானவர்களும்தான் அதிகமாக உள்ளார்கள். பல்கலைக்கழகத்தின் சில பீடங்கள், சில துறைகள் ஏற்கனவே சிங்களமயப்பட்டு விட்டன. அங்கெல்லாம் மாணவத் தலைவர்களைத் தேர்வு செய்யும் பொழுது சில சமயம் சிங்கள மாணவர்களும் தெரிவு செய்யப்படக்கூடிய ஆபத்து அதிகரித்து வருகிறது. அதுமட்டுல்ல தமிழ் மாணவர்கள் மத்தியில் தெரிவு செய்யப்படுகிறவர்களுக்கும் சில சமயம் சிங்களக் காதலிகள் உண்டு என்று ஒரு செயற்பாட்டாளர் சுட்டிக்காட்டினார். பல்கலைக்கழகத்தின் சில துறைகள் பெருமளவுக்கு சிங்கள மயப்பட்டுவிட்டன.

ஆனாலும் யாழ் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் தேசியவாதத்தின் பக்கம் நிற்கும் விரிவுரையாளர்களே அதிகம். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மக்கள் பேரவை இயங்கிய பொழுது சில விரிவுரையாளர்கள் அதில் அங்கம் வகித்தார்கள். ஆனால் கடந்த ஆண்டு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான மக்கள் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்ட பொழுது, அதில் பல்கலைக் கழகத்தின் அரசியல்துறை தலைவரைத்தவிர ஏனைய விரிவுரையாளர்கள் அங்கம் வகிக்கத் தயாராக இருக்கவில்லை. மட்டுமல்ல, அதுதொடர்பான உரையாடல்களிலும் அவர்கள் கலந்து கொள்ளவில்லை.

பொது வேட்பாளரை ஆதரித்து மேடைகளில் பேசத் தயாராக இருந்த சில விரிவுரையாளர்களும் அதற்கான செயற்பாட்டில் இறங்கத் தயாராக இருக்கவில்லை. பொது வேட்பாளர் என்ற கருத்துருவம் கொழும்பு மைய அரசியலுக்கு எதிரானது. எனவே அரசாங்கத்தைப் பகைக்க வேண்டியிருக்கும். அதனால் வரக்கூடிய இழப்புகளையும் ஆபத்துக்களையும் தாங்க வேண்டியிருக்கும். இது ஒரு காரணமாக இருக்கலாம். அதே சமயம் தேசிய மக்கள் சக்திக்காக வேலை செய்யும் பொழுது அதில் ஒரு பாதுகாப்பு உண்டு. ஏனென்றால் அதுதான் அரசாங்கம். அங்கே இழப்புகளுக்கும் பயங்களுக்கும் இடம் குறைவு. இதுகாரணமாகத்தான் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவான விரிவுரையாளர்கள் புத்திஜீவிகள் பகிரங்கமாக மேடைகளில் தோன்றத் தொடங்கி விட்டார்கள்.

ஆனால் யாழ்.பல்கலைக்கழகம் ஒரு காலம் தமிழ்த்தேசிய வாதத்தின் அடைகாப்பு மையங்களில் ஒன்றாக இருந்தது. ஆயுதப் போராட்டத்தை ஆதரித்ததற்காக விரிவுரையாளர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு அரசியல் கைதிகளாக இருந்திருக்கிறார்கள். சிலர் தலைமறைவாக இருந்தார்கள். அது மிக ஆபத்தான காலம். ஆனால் அக்காலகட்டத்திலும் விடுதலைப் போராட்டத்தோடு உறுதியாக நின்ற ஒரு கல்விச் சமூகம், அறிவுஜீவிகளின் சமூகம் இப்பொழுது அவ்வாறு இல்லை.

பல்கலைக் கழகம் இதில் ஒரு குறியீடு. ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய அரசியலின் குறியீடு. தமிழ்த் தேசிய அரசியல் இப்பொழுது வந்து நிற்கும் இடம் அதுதான். கடந்த 15 ஆண்டுகளாக தமிழ்த் தேசிய கட்சிகள் கட்சிகளாகவும் தங்களையும் வளர்த்துக் கொள்ளவில்லை. தமிழ் மக்களையும் ஒரு தேசமாகத் திரட்டவில்லை. அதன் விளைவாகத்தான் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் அப்படி ஒரு தோல்வி ஏற்பட்டது. அந்த தோல்வியிலிருந்து கற்றுக்கொண்டு, வர இருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலையாவது அவர்கள் பொருத்தமான உபாயங்களோடு அணுகுவார்களா?

தமிழ்த் தேசியப் பரப்பில் இப்பொழுது மொத்தம் நான்கு தரப்புகள் உண்டு. தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கூட்டு, சங்குக் கூட்டு, விக்னேஸ்வரனின் கட்சி ஆகிய நான்கு தரப்புகள் அரங்கில் உண்டு. ஆனால் இந்த நான்கு தரப்புகளுக்கும் அச்சுறுத்தலாக இருப்பது ஒரே ஒரு தரப்பு. அதுதான் தேசிய மக்கள் சக்தி. அதாவது ஆளுங்கட்சி.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது அந்தக் கட்சி எந்த ஒரு சிங்களக் கட்சியோடும் கூட்டுச்சேர மறுத்துவிட்டது. வேண்டுமானால் எங்களோடு வந்து இணையுங்கள் என்று தான் அவர்கள் கேட்டார்கள். தமிழ்த் தரப்பிலும் அவர்களை நோக்கிச் சென்ற கட்சிகளை அவர்கள் கட்சிகளாக இணைத்துக் கொள்ளவில்லை. எங்களுக்குள் கரைந்து விடுங்கள் என்றுதான் கேட்டார்கள். அதன் மூலம் அவர்கள் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். இப்பொழுது உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் அவர்கள் அதே கொள்கையைத்தான் பின்பற்றுகிறார்கள். தங்களோடு இணைய விரும்புகிற யாரும் தங்களுக்குள் கரைந்து விட வேண்டும் என்பதே அவர்களுடைய நிபந்தனை.

இது கட்சிகளுக்கு மட்டுமல்ல தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் பொருந்தும்.

"இலங்கையர்களாகச் சிந்திப்போம்" என்று அவர்கள் கூற வருவது அதைத்தான். உங்கள் தேசிய அடையாளங்களை கைவிட்டு, உங்கள் தேசிய இருப்பைக் கைவிட்டு கொண்டு, இலங்கையர்களாக எங்களோடு கரையுங்கள் என்று அவர்கள் கேட்கிறார்கள். நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் அவர்களுக்கு எதிர்பாராத வெற்றியைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த வெற்றியை மேலும் உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் உறுதிப்படுத்திக் கொண்டால் நாங்கள் இலங்கையர்களாக ஒன்றாகி விட்டோம் என்று அவர்கள் கூறப் போகிறார்கள்.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் பொருத்தமான விழிப்பும் பொருத்தமான வியூகங்களும் உண்டா?

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஓரளவுக்கு பொருத்தமான வியூகங்களை வகுத்து, பொருத்தமான ஒரு கூட்டை உருவாக்கியிருக்கின்றது. ஆனால் அது தமிழ் மக்கள் முன் ஒரு பிரம்மாண்டமான கூட்டாக இன்னமும் எழுச்சி பெறவில்லை.

தமிழரசுக் கட்சி தொடர்ந்தும் இரண்டு பட்டிருக்கின்றது. சுமந்திரன் கட்சிக்குள் தன் பிடியை படிப்படியாக பலப்படுத்தி வருகின்றார். கட்சித் தலைவருக்கான தேர்தல் இனி நடக்குமாக இருந்தால் பெரும்பாலும் அவர்தான் வெல்வார். கட்சியின் செயலாளராக வந்ததன்மூலம் அவர் கட்சியின் அடிபட்ட உறுப்பினர்கள் மத்தியில் தனக்கு விசுவாசமானவர்களின் தொகையை பெருக்கி வருகிறார். உள்ளூராட்சி சபைத் தேர்தலை நோக்கிக் கட்சியை வழிநடத்துவது என்ற அவருடைய செயற்பாட்டுக்குள் இரண்டு பிரதான உள் நோக்கங்கள் உண்டு. முதலாவது உள்நோக்கம், கட்சிக்குள் தலைமைப் பொறுப்புக்காக இனி நடக்கக்கூடிய தேர்தலில் கட்சியின் தலைவராகத் தானே தெரிவு செய்யப்படக்கூடிய நிலைமைகளை உறுதிப்படுத்துவது. இரண்டாவது, சிறீதரனை கிளிநொச்சிக்குள் முடக்குவது. பின்னர் படிப்படியாக கட்சியை விட்டு அகற்றி விடுவது. அவரைப் பொறுத்தவரை கட்சியை பலப்படுத்துவது என்பது தன்னுடைய விசுவாசிகளின் தொகையை அதிகப்படுத்துவது. சிறீதரனை ஓரங்கட்டுவது.

இந்த இரண்டு உள்நோக்கங்களையும் முன்வைத்து அவர் படிப்படியாக கட்சிக்குள் தன் பிடியை பலப்படுத்தி வருகிறார். அவர் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் அரசியலுக்கு உரியவரல்ல. தன் கட்சியை இரண்டாக உடைத்து வைத்திருக்கும் ஒருவர் எப்படித் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவார்?

இப்படித்தான் இருக்கிறது தமிழ்த் தேசியக் கட்சிகளின் நிலைமை. இந்நிலையில் நான்கு தரப்புகளாக தமிழ்த் தேசியக் கட்சிகள் தேசிய மக்கள் சக்தியை எதிர்கொள்ளப் போகின்றன. அனுர அலை தெற்கில் வடியத் தொடங்கி விட்டது என்று விமர்சகர்கள் கூறுகிறார்கள். அதுபோல தமிழ் பகுதிகளிலும் அந்த அலை தொடர்ந்தும் வீசுகின்றதா அல்லது வடிகிறதா?

கடந்த நாடாளுமன்ற தேர்தலிலும் வடக்கு கிழக்கில் அது ஒரு பேரலையாக இருக்கவில்லை. தமிழ் கட்சிகள் மீதான வெறுப்பில் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தார்கள். கடந்த நாடாளுமன்றத்தில் தமிழ் பகுதிகளில் வாக்களிப்பு கோலத்தை கூட்டிக்கழித்துப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாக தெரியும். தமிழ் தேசிய கட்சிகள் ஒரு குடையின் கீழ் நின்று இருந்திருந்தால் அதிக ஆசனங்கள் அவர்களுக்குத்தான். தேசிய மக்கள்சக்தி பின் தள்ளப்பட்டிருக்கும்.

இது விடயத்தில் உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் தமிழ்த்தேசிய கட்சிகளுக்கு இடையே போட்டித் தவிர்ப்பு உடன்பாடு தேவை என்று பல தரப்புகளும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்த போதிலும் அது தொடர்பான உரையாடல் எவையும் இன்றுவரை தொடங்கவில்லை. கடந்த மாதம் ஐநா இலங்கையில் அதன் 70ஆவது ஆண்டு பிரசன்னத்தைக் கொண்டாடிய பொழுது அந்த நிகழ்வு யாழ் திண்ணை ஹோட்டலில் இடம்பெற்றது. அங்கு சுமந்திரனைக் கண்டபோது போட்டித் தவிர்ப்பு தொடர்பாக அவரிடம் கதைத்தேன். அவர் பதில் சொல்லவில்லை. மணிவண்ணனிடமும் சொன்னேன். இது நடந்து பல வாரங்களாகி விட்டன. கட்சிகள் தங்களுக்கு இடையே போட்டித் தவிர்ப்புக்கு போகக்கூடிய நிலைமைகள் இருப்பதாகத் தெரியவில்லை. "நான் நான்" என்றுதான் ஒவ்வொரு கட்சியும் சிந்திக்கின்றது. "நாங்கள்" என்று அதாவது "நாடு தேசம்" என்று சிந்திப்பதாகத் தெரியவில்லை. நான் நான் என்று சிந்தித்தால் போட்டி தவிர்ப்பிற்குப் போகமுடியாது. நாங்கள் என்று சிந்தித்தால்தான் போட்டித் தவிர்ப்புக்குப் போகலாம். ஆனால் தேசிய மக்கள் சக்தியோ "நாங்கள் இலங்கையர்கள்" என்று சொல்லிக் கொண்டு தமிழ்க் கிராமங்களைக் கவ்விப் பிடிக்க முயற்சிக்கின்றது.




கனடாவின் பொருளாதாரத்தை வலுப்படுத்தி, அநீதியான வர்த்தகப் போரை முடிவுக்குக் கொண்டு வந்து வலுவாக எழுவோம்

ஒரு நாளுக்கு $10 சிறுவர் பராமரிப்பு

காப்புறுதி செய்யப்படாதவர்களுக்கான பற்சிகிச்சைப் பராமரிப்புத் திட்டம்

65+

RRIF திரும்பப் பெறுதல்களைக் குறைத்து, ஒரு வருடத்திற்கு உத்தரவாத வருமான துணைத் தொகையை 5% அதிகரித்து முதியோருக்கு ஆதரவளித்தல்

மலிவானதும், அணுகக்கூடியதுமான வீடமைப்பு

வலுவான எல்லைகளும், பாதுகாப்பான சமூகங்களும்

## வாக்களிப்பதற்கான வழிகள்

**APR 28**

தேர்தல் நாள்
ஏப்ரல் 28
காலை 9:30 முதல்
இரவு 9:30 வரை

Authorized by the Official Agent for Gary Anandasangaree

NISSAN | VILLAGE NISSAN

தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு
சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்

*DAA ROTATION



*DAA ROTATION



*DAA ROTATION



**25 SENTRA**
S CVT ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,695 Down
+$1,000 60th Anniversary Cash

**25 KICKS PLAY**
S ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,192 Down
+$1,000 60th Anniversary Cash

**25 ROGUE**
S AWD
0.99% | 30 MOS. LEASE
+$1,000 60th Anniversary Cash



**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT
905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

NISSAN | VILLAGE NISSAN
25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com




RE-ELECT **JEAN YIP**
SCARBOROUGH-AGINCOURT

- ஜீன், தேர்தல் எல்லை மாற்றங்களின் போது ஸ்கார்பரோ-அஜின்கோர்டின் தனித்துவம் மற்றும் தொகுதியின் அடையாளத்தை சிறப்பாகக் காக்கும் பணியை செய்துள்ளார்.
- 2023-ஆம் ஆண்டு Bridletowne Neighbourhood Centre-க்கு கனடா மத்திய அரசின் $26.7 மில்லியன் நிதியை பெற்றுத் தந்தார்; 2025 மார்ச்சில் கூடுதலாக $9 மில்லியன் நிதியையும் பெற்றுள்ளார்.
- ஸ்கார்பரோ மெட்ரோ நீட்டிப்பு திட்டத்திற்கு $2.26 பில்லியன் நிதியை ஸ்கார்பரோ தொகுதி எம்.பிக்கள் பெற்றுத் தந்தனர்.
- ஸ்கார்பரோ-அஜின்கோர்ட் தொகுதியில், கனடிய பல் பராமரிப்பு திட்டத்தின் கீழ் 15,003 மக்கள் தற்போது பயனடைந்து வருகின்றனர்; மே மாதத்தில் இத்திட்டம் மேலும் விரிவடைய இருக்கிறது.
- ஸ்கார்பரோ-அஜின்கோர்ட் பகுதியில் Toronto காவல் துறையின் Neighborhood Community Officer திட்டத்திற்கு உறுதுணையாக இருந்துள்ளார்.

ஜீன் மற்றும் அவருடைய சக உத்தியோகஸ்தர்கள் எளிதாக அணுகக்கூடியவர்களாக மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்க தயாராக உள்ளனர். ஜீன் அவர்கள் எங்கள் தேவைகளை நன்கு புரிந்தவராக, கலாச்சார வேறுபாடுகளை மதிப்பவராக, நாங்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை உணர்ந்து மக்களுக்காக நியாயமாக பேசுகின்ற பிரதிநிதியாக செயல்பட்டுவருகின்றார்.
ஜீன் அவர்கள் மக்களிடம் காட்டிவரும் அக்கறை, நேர்மை, தன்னலமற்ற அர்ப்பணிப்பு மற்றும் பல் கலாச்சார சமூகத்தை மதிக்கும் மனப்பான்மை என்பன அவர்களின் சிறந்த பண்பாகும் மக்கள் அனைவரின் தெரிவாக ஜீன் அவர்கள் தொடர்ந்து ஸ்கார்பரோ–எஜின்கோர்ட் தொகுதிக்கான சிறந்த மக்கள் பிரதிநிதியாக அமைய வேண்டும் என வாழ்த்துகின்றோம்.
சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் பிரதம குரு, ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
- Dr. Sivasri Panchadchara Vijayakumara Kurukkal, Chief Priest, Varasiththi Vinayagar Hindu Temple




**VOTE**
**ELECTION DAY**
MONDAY
**APRIL 28**
9:30 AM - 9:30 PM

SCAN HERE TO VISIT ELECTIONS.CA
Authorized by the Official Agent for Jean Yip.


Campaign Office:
11 Ivy Bushe Ave
Scarorough, ON

Need a ride to the polls? Contact us!
வாகன உதவி தேவையா?வாக்களிக்கச் செல்ல?

Phone: (647) 931-0755
Email: info@jeanyip.ca
Website: www.jeanyip.ca


எமது ஸ்கார்பரோ–அஜின்கோர்ட்
தொகுதிக்கான கொன்சர்வேட்டிவ் கட்சி
வேட்பாளரின்கொள்கை அறிவிப்புகள்
ELECT
Aris
MOVSESSIAN
Scarborough-Agincourt
• அமெரிக்காவின் நியாயமற்ற வரிகளுக்கு எதிராக போராடுதல் மற்றும் கனேடிய மக்களின் வேலைகளை பாதுகாத்து நமது பொருளாதாரத்தை மீண்டும் கட்டுபாட்டில் எடுத்தல்.
• வருமான வரியை 15% குறைத்து, சராசரி தொழிலாளிகளுக்கு ஆண்டுக்கு $900 சேமிக்கவும், இரண்டு வருமானம் கொண்ட குடும்பங்கள் $1,800 சேமிக்கவும் உதவுதல்.
• மூத்த குடிமக்கள்
- வரி விலக்குடன் சூ34,000 வரை சம்பாதிக்கவும்,
- 73 வயது வரை ஓய்வூதிய சேமிப்புத் (சுசஒரி) பங்களிப்பு நெகிழ்வுத்தன்மையை அதிகரிக்கவும்,
- ஓய்வூதிய வயதை 65 ஆக உறுதிப்படுத்தவும் உதவுதல்.
• புதிய வீடுகளுக்கான மத்திய விற்பனை வரியை $1.3 மில்லியன் வரை குறைத்து, வீடு வாங்குபவர்களுக்கு $65,000 வரை சேமிக்கவும் உதவுதல்.
• மோசமான குற்றவாளிகள் மீண்டும் ஒருபோதும் சுதந்திரமாக நடக்காமல் இருப்பதை உறுதி செய்வதன் மூலம் கனடியர்க்ளின்பாதுகாப்பை கவனித்தல்.
"எதிர்வரும் ஏப்ரல் 28ம் திகதி மாற்றத்திற்காக வாக்களியுங்கள்! Aris Movsessian அவர்களுக்கு வாக்களியுங்கள்!"
www.arismovsessian.ca
info@arismovsessian.ca
(416) 477-9933
Unit 5-2950 Birchmount Rd, Scarborough, M1W 3G5
Authorized by the Official Agent of Aris Movsessian.


OCCUPATIONAL DISABILITY
RESPONSE TRAINING
PREVENTION LINK
காயமடைந்த, நோய்வாய்ப்பட்ட மற்றும் ஊனமுற்ற தொழிலாளர்கள் பணியிடத்தில் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வது அனைவரின் பொறுப்பாகும்.
இதற்கு தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள், முதலாளிகள் மற்றும் சமூகத்தினரிடமிருந்து கல்வி, விழிப்புணர்வு மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவை தேவைப்படுகிறன.
VIRTUAL & IN-PERSON
TRAINING 2025
Contact us at info@preventionlink.ca
Scan the QR code to register for a course.
Level One: Rights and Obligations
» September 3-17
Level Two: Benefits and Services
» October 9-23
Levels 1 & 2: Workers' Compensation Fundamentals
» June 2-6
Psychological Health & Safety and Return to Work
» September 28 – October 3
Principles of Accommodation Law
» May 21 » June 26 » December 3
Return to Work 101
» May 14 » June 19 » December 2
Watch for registration deadlines and early bird discounts!


On April 28, re-elect
Salma Zahid
Scarborough Centre - Don Valley East
Cut taxes for middle class families
Build 500,000 new homes you can afford
Build fastest growing economy in G7
CANADA STRONG
/SalmaZahid15
/SalmaZahidMP
Authorized by the Official Agent for Salma Zahid

## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:


டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**




11/24

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 18 - 10 - 1939



மறைவு: 23 - 02 - 2025

### அமரத்துவமாது சிவபாக்கியம் கண்ணையர்
(புங்குடுதீவு 3ம் வட்டாரம்)

யாழ்ப்பாணம் புங்குடுதீவு 3ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கில் வதிவிடமாக கொண்டும் பின்னர் கனடாவில் வாழ்ந்து வந்த திருமதி. சிவபாக்கியம் கண்ணையா அவர்கள் கடந்த 23.02.2025 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்பான கணவரையும் அருமையான பிள்ளைகள் மற்றும் மருமக்கள் உடன்பிறப்புக்களை மைத்துனர்கள், உற்றார் ஊரார் மற்றும் உறவுகளோ பாசத்தோடும் நேசத்தோடும் வாழ்ந்த அன்னையின் 31ம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் எதிர்வரும் 26 April 2025 சனிக்கிழமை மதியம் 11.00 மணி தொடக்கம் 733 **Birchmount Road, Scarborough** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள கனடா கந்தசாமி ஆலயத்தின் மண்டபத்தில் நடைபெறும்.

அத்தருணம் உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம், குடும்பத்தினர்
தகவல்: பாஸ்கரன் கண்ணையா 416 388 1996

# பல்லின சமூக நிகழ்வுகளுக்கு ஒன்ராறியோ அரசால் இவ்வாண்டு 20 மில்லியன் டொலர்கள் வழங்கப்பெற்றுள்ளன — தமிழ்ச் சமூகத்தின் கலை, கலாசார நிகழ்வுகளுக்கும் நிதியுதவி




ஒன்றாறியோ மாகாணத்தில் இவ்வருடம் பல்லியனச் சமூகங்களின் கலை, கலாசார நிகழ்வுகளையும் பண்டிகை நிகழ்வுகளையும் நடத்துவதற்கு ஒன்ராறியோ அரசாங்கம் 20 மில்லியன் டொலர் நிதியை முதலீடு செய்துள்ளது. தமிழ்ச் சமூகத்தின் கலை, காரசாரத்தை வெளிப்படுத்தும் நிகழ்விற்கும் இதில் 55,000 டொலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
ஒன்றாறியோ மாகாண அரசின் சுற்றுலாத்துறை, கலாசார அமைச்சர் ஸ்டான் சோ அவர்கள் நேற்று வியாழக்கிழமை 24ம் திகதி இதற்கான அறிவிப்பை உத்தியோகபூர்வமாக வெளியிட்டார்.


இதுகுறித்து கருத்து வெளியிட்ட ஸ்காபரோ வடக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், ரேமண்ட் சோ (**Raymond Cho**), இந்த நிதியுதவி ஸ்காபரோவில் சமூகங்களின் கலை, கலாசாரத்தை ஊக்குவிப்பதில் ஒன்ராறியோ அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியிருப்பதாக தெரித்தார்.

அத்துடன், இந்த நிதியுதவி மூலம், கனடிய தமிழ் வானொலி நடத்தும் "நட்சத்திர விழா" தமிழ் மக்களின் கலை, கலாசாரத்தைப் பிரதிபலிக்கவும், இது பல்லின சமூகத்தைக் கொண்ட ஒன்ராறியோவை மேலும் சிறப்படையச் செய்வதற்கும் வலுசேர்ப்பதாகவும் சட்டமன்ற உறுப்பினர் ரேமண்ட் சோ தெரிவித்தார்.
"நட்சத்திர விழா"வை ஏற்பாடு செய்துள்ள கனடிய தமிழ் வானொலி இரண்டாவது வருடமாக இந்த நிதியுதவியைப் பெறுகின்றமை விசேட அம்சமாகும்.
இதுகுறித்து கனடியத் தமிழ் வானொலியின் பணிப்பாளர் குமாரசுவாமி கருத்து தெரிவிக்கும்போது, கடந்த 25 வருடங்களாக நட்த்திர விழாவை ஸ்காபரோவில் நடத்தி வருகிறோம். இம்முறையும் இந்நிகழ்வை பிராமாண்டமாக ஏற்பாடு செய்து வருகிறோம். சுமார் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பங்குகொள்ளும் இந்த நிகழ்வு இவ்வருடம் ஜுன் மாதம் 27ஆம் 28ஆம், 29ஆம் திகதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
குறிப்பாக தமிழ் மக்களின் கலை, கலாசார, நிகழ்வுகளை ஊக்குவித்து ஒன்றாரியோ அரசாங்கம் வழங்கி வரும், இந்த நிதியுதவிகளுக்கு தமிழ் மக்கள் சார்பாக நன்றிை தெரிவித்துக்கொள்கிறோம்." என்றார்.
ஒன்றாறியோ முழுவதும் இவ்வருடம் சுமார் 350 நிகழ்வுகளையும், பண்டிகைக் கொண்டாட்டங்களையும் நடத்துவதற்கு ஒன்றாறியோ அரசாங்கம் இந்த நிதியை ஒதுக்கியுள்ளது.

சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பதற்கும், மாகாண பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் பல்லின சமூகங்களின் பாரம்பரிய, கலை, கலாசார நிகழ்வுகளை ஊக்குவிப்பதற்கும் இந்த உதவிகளை ஒன்றாறியோ அரசாங்கம் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஸ்காபரோ வடக்கு சட்டமன்ற உறுப்பினர் ரேமண்ட் சோ அலுவலகம்

**416-988-9314 | raymond.cho@pc.ola.org**



# வன்னியியல் ஆய்வு மன்றத்தின் ஆதரவில் பொன்.புத்திசிகாமணியின் "நான் பார்த்த நந்திக்கடல்"

**- குமுளன்**

கடந்த 13.04.2025 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு வன்னிச்சங்க மண்டபத்தில் தலைவர் இரத்தினசிங்கம் சிவகுமாரன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வைத் தொகுத்து வழங்கினார் கலாநிதி பார்வதி கந்தசாமி அவர்கள். தமிழ்த்தாய் வாழ்த்தை திருமதிகள் நந்தினி உருத்திரேஸ்வரன் மற்றும் கவிதா ரமேஸ் இசைத்தனர். தொடர்ந்து செல்விகள் ஆதியா மற்றும் ஆரபி ரமேஸ் இசைத்ததைத் தொடர்ந்து அக வணக்கத்துடன் கூட்டம் ஆரம்பமானது.

வரவேற்புரையை திருமதி. நந்தினி உருத்திரேஸ்வரன் நிகழ்த்தினார். தொடரந்து வாழ்த்துரை தெரிவித்த பிரபல எழுத்தாளர் அண்ணாமலை பாலமனோகரன் அவர்கள் புத்திசிகாமணியின் எழுத்தாற்றலையும் அவரது மண்பற்றையும் விதந்துரைத்ததோடு நான்பார்த்த நந்திக்கடலை யதார்த்தமாக அனைவரது கண்முன்னே கொண்டுவந்துள்ளமையும் அங்குள்ள மக்களின் வாழ்வியலைப் படம்மபிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. அத்தோடு முள்ளிவாய்க்கால் போர்க்காலத்தில் அந்த கடலில் மிதந்து உடலங்களும் இரத்த ஆறும் உள்ளத்தை உருக்குவதாக எடுத்துரைத்து புத்திசிகாமணியின் "நான் பார்த்த நந்திக்கடல் அவருடைய சொந்த ஊரான வட்டுவாகலை எம்மனக்கண் முன்கொண்டுவந்து நிகழ்த்துவதன் காரணமாக புலம்பெயர்ந்து வாழ்கின்ற அவருடைய மக்களும், அவர்களுடைய சந்ததிகளும் தம்முறை ஊரை என்றும் மறவாது வாழ்வது மட்டுமல்ல அவ்வூர் மக்களுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்து வருகின்றார். அவர் சுகநலமாக இருந்து தொடர்ந்து பணியாற்றவேண்டும் என வாழ்த்தினார்.

தொடர்ந்து கலாநிதி செல்வநாயகி ஸ்ரீதாஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். அவர் வன்னியைப் பற்றி நான் அறிந்ததைவிட இன்று பலவற்றை அறியமுடிகின்றது. வன்னி மக்களின் வாழ்வியலைப் படம்பிடித்துக்காட்டும் நூலாக அமைந்துள்ளமை பாராட்டத்தக்கது. நானும் வன்னியில் பிறந்தவள்தான். ஆனால் வன்னிபற்றிய தேடல்கள் இன்று எமக்கு வன்னிபற்றி அறிய வன்னியியல் ஆய்வு மன்றம் செயற்பட்டு வருவது பாராட்டத்தக்கது. அத்தோடு புத்திசிகாமணி தொடர்ந்தும் எழுத வேண்டும் என வாழத்துரை வழங்கினார்.

கருத்துரை தெரிவித்த முனைவர் பார்வதி கந்தசாமி பௌத்த ஆலயங்கள் அங்கங்கு முளைக்கின்றன. தமிழர்கள் பௌத்தர்களாக இருந்துள்ளனர் என்னும் உண்மை வரலாறு மறைக்கப்பட்டுள்ளது. இவற்றைப் புத்திசிகாமணி போன்றோர் வெளிக்கொண்டுவரவேண்டும் என்றார். தொடர்ந்து அவர் புத்திசிகாமணியின் அண்ணா சேதுபதி எங்கள் பாடசாலையில் வந்து கும்மி நடனம் கற்றுத்தந்தது நினைவிருக்கின்றது. நல்லதொடு கலைக்குடும்பம் அவரது நான்பார்த்த நந்திக்கடல் வட்டுவாகலைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. என்னோடு படித்த பார்வதி வடிவேலு வட்டுவாகலைச் சேர்ந்தவர் அவர் மிக நெருக்கமாக ,ருந்தவர் என்று ஊரின் வரலாறு விரிவாகப்பதிய புத்திசிகாமணி முயற்சிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து தலைமையுரையாற்றிய சிவகுமாரன் இரத்தினசிங்கம் வன்னிச்சங்கம் மக்களின் நலன் சார்ந்து செயற்படுகின்றது. கனடாவிலும் புலத்திலும் நாம் உதவி வருகின்றோம். இவ்வித நூல் வெளியீடுகளை செய்வதானால் எங்களை நாடுங்கள் நாம் அனைத்து ஒழுங்குகளையும் செய்துதத்தாயாரக உள்ளோம் எனவும் உரைத்ததோடு நந்திக்கடல் தான் வாழ்ந்த மண்ணின் வாழ்வியலை எடுத்துக்காட்டும் அருமையான படைப்பு அவர் தொடர்ந்து மேலும் பல படைப்புக்களை தரவேண்டும் எனவும் உரைநிகழ்த்தினார்.

நூலாசிரியரை அறுமுகப்படுத்தி உரைநிகழ்த்திய சபா இராசேஸ்வரன் வட்டுவாகலில் சாதாரண குடும்பத்தில் பிறந்து அங்கு ஆரம்பக்கல்வியைக் கற்று பின்னர் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தரம் வரை கற்றவர். பல்வேறு முன்னேற்றகரமான வேலைத்திட்டங்களைத் தீட்டி அப்பிரதேச இளைஞர்களை ஊக்குவித்துவந்தர். விளையாட்டு குழுக்களிலும் நாடக அரங்கங்களிலும் ப்ஙகுகாண்டவர். அவரின் மூத்த சகோதரர் சேதுபதியின் வழிகாட்டலில் கலைத்துறையில் மிகவும் ஈடுபாடு கொண்டு உழைத்தவர். பின்னாளில் வீரகேசரி செய்தி நிருபராகச் செயற்பட்டு முல்லைத்தீவில் இடம்பெற்ற பல்வேறு நிகழ்வுகள் பற்றியும் முறைகேடுகள் பற்றியும் எடுத்துக் கூறி பத்திரிகைகளில் முக்கிய செய்திகளை வெளியிட்டவர். சமூகம் சார்ந்த இவரது செயற்பாடுகளால் இவர் இராணுவத்தின் சித்திரவதைக்கும் ஆளானாவர் அவர் பல நூல்களை எழுதியுள்ளார். தொடர்ந்தும் எழுதவேண்டும் எவும் வேண்டிக்கொண்டார்.

தொடர்ந்து அவரது ஊரவரான சட்டத்தரணி முத்தையா பாலாச்சந்திரன் வெளியீட்டுரையை நிகழ்த்துகையில் புத்திசிகாமணியின் இளமைக்காலத்து செயல்கள் பற்றிச்சிலாகித்ததோடு தன்மையும் விமைளயாட்டுக் குழவில் இணைத்துக்கொண்டவர் எனப்பாராட்டி இளமைக்காலத்து நினைவுகளை மீட்டுரையாற்றியதோடு நந்திக்கடலில் நடந்த வாழ்வியல் நடவடிக்கைகளை நானும் பார்த்துள்ளேன். என எடுத்துரைத்து நூலை வெளியீடு செய்துவைத்தார். அதனை கலாநிதி செல்வநாயகி ஸ்ரீதாஸ் மற்றும் செல்வி குமுதினி, சபா இராசேஸ்வரன், கனகசீலன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து ஆய்வுரை நிகழ்த்திய த.சிவபாலு வட்டுவாகல் பற்றிய அரியதொரு வரலாற்றுப்படைப்பாக இது உள்ளது. இதனை சிறுகதை என்பதா பெருங்கதை என்பதா அல்லது நவீனம் என்பதா அல்லது வராற்றுத் தொகுப்பு என்பதா என்பதில் எனக்கு வித்தியாசமான பார்வை உண்டு என்றவர் இதனை நான் ஒரு வராற்று ஆவணமாகவே பார்க்கின்றேன்.

முள்ளிவாய்க்கால் வலயன்பமடம், பொக்கணை, சுண்டிக்குளிமட்டுமல்ல முல்லைத்தீவில் கடை வைத்திருந்தவர்கள் பற்றிய விபரங்களையும் முன்னர் இருந்த மலசல சுத்திகரிப்புப் பற்றியும் பதிவிட்டுள்ளார். அத்தொழிலாளர்களின் பணிகள் மாற்றியமைக்கப்பட்ட நிலைமைகளையும் எடுத்துரைத்துள்ளார். எனக்குறிப்பிட்ட அவர் வட்டுவால் முத்தையா ஆசிரியர் என்னைப் பயிற்றுவித்தவர் அத்தோடு என்னோடு சக ஆசிரியராகவும் பணியாற்றியவர். அவரிடமிருந்து வட்டுவாகல் சப்தகன்னியர் வரலாறு மற்றும் அங்கு வாழும் மக்களின் வரலாறு போன்றவை பற்றி எழுத உதவிகோரலலாம். சண்முகம் ஆசிரியர் முல்லைத்தீவு சைவப்பாடசாலையில் பணியாற்றியவர். சிதம்பரப்பிள்ளை குமளமுனையில் காணி அதிகாரியாகப் பணியாற்றியவர். பார்வதி என்னோடு கற்றவர் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் ,ருவரும் செயலாற்றியவர்கள். முல்லைத்தீவின் கடல்தொழில் சம்மாட்டியார், மீன், கருவாடு கொழும்புக்கு ஏற்றுதல், சீதணம் கொடுத்துச் சீரழிந்த துரையர் பற்றியும் விவரித்துள்ளமை மக்கள் வாழ்வியலன் நிதர்சனம். எமது ஊரில் உள்ள தண்ணிமுறிப்புக் குளத்தின்கீழ் ஒரு கண்டம் வட்டுவாகலார் கண்டம் எனப்படும் அவர்கள் குமளமுனையார் கண்டத்திற்கு முன்னரான பகுதியில் வயல்கள உடையவர்கள். வட்டுவாகல் மக்களின் வாழ்வியலை நான் நன்கு அறிந்திருந்தேன் என்றாலும் மட்டி சுட்டுக்சாப்பிடும் பழக்கத்தை இந்த நூலில் அறிந்துகொண்டேன். முல்லைத்தீவில் கற்பித்த வேளை வட்டுவாகல் மாணவர்கள் என்னிடம் படித்தது மட்டுமல்ல விளையாட்டுக்களகங்கள் மூலம் பல இளைஞர்களோடு பழகும் வாய்ப்பும் ஏற்பட்டது. முல்லைத்தீவும் வட்டுவாகலையும் பிரிக்கும் ஒரு சிறிய நீரோடை உண்டு. அது மாரியில் சற்று பெருக்கெடுத்து ஓடும். கோடையிலர் நீற்வற்றி தேங்கிநிற்கும். வட்டுவாகல் பாலத்தைக் கட்டியவர் அடங்கத்தமிழன் எனப்பட்ட சி.சுந்தரலிங்கம் ஆவர். ஆதனால் புதுக்குடியிருப்பு முள்ளிவாய்க்கால், மாத்தளன் பொக்கணை போன்ற ,டமத்து மக்களுக்கு அது ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது அது ஒரு வரலாற்றுப்பதிவாகும். இதனை புத்திசிகாமணி பதிவிட்டுள்ளார். வட்டுவாகல் விவசாயம், கடல்வளம் மட்டுமல்ல பறவைகள் பற்றியும் அழகாக எழுததியுள்ளார் என்றதோடு வட்டுவாகல்பற்றி ஒரு தொகுப்பு நூலை எழுதவேண்டும் என்னும் வேண்டுகொளையும் விடுத்தார்.

தொடர்ந்து பொன்.புத்திசிகாமணிக்கு நண்பர்கள் பொன்னாடை போர்த்தித் தங்கள் அன்பைத் பரிமாறிக்கொண்டனர்.

தனது ஏற்புரையில் அனைவருக்கும் நன்றியறிதலைத் தெரியத்தந்ததொடு தான் உண்மையில் கண்டவற்றை எழுதினேன் எதனையும் ஒழிவுமறைவின்றி எழுதுவதே சரியென எனக்குப் பட்டது. எம்மவர்களின் வாழ்வியலை மட்டுமல்ல இளமையில் சிறுவர்களாக இருந்த வேனை எதனைச் செய்தோமோ அவற்றை நான் எழுதியுள்ளேன். குளிக்கும்போது ஆண் உறுப்மை மறைக்கக்கட்டப்படும் துண்டை "கோமணம்" என்று அழைப்பதை குறிப்பிட்டுள்ளார். அதனைச் சிலல் "கவிஞனம்" என்றும் அழைப்பர் எனவும் தான் முன்னர் எழுதிய சொர்ணம்மா, சின்னாச்சிக்கிழவி ஆகியவற்றில் எமது ஊர்பற்றி விரிவாக எழுதியுள்ளேன் என நகைச்சுவை ததும்ப உரையாற்றினார். அவரது நகைச்சுவை நிறைந்த சபையோரின் சிரிப்பொலியின் மத்தியில் மிக நகைச்சுவையாக உரையாற்றினார்.

தொடர்ந்து வன்னிச்சங்கத்தின் செயலாளர் சிவபாதம் இரத்தினாகரன் அனைவருக்கும் நன்றியுரை தனித்தனியாகக் குறிப்பிட்டு உரையாற்றியதோடு விழா சிறப்புற நிளைவெய்தியது. தோடர்ந்து அனைவருக்கும் நூல்கள் வழங்கப்பட்டன.

## உழைப்பாளர் தினம்

சிக்காகோ நியுயோர்க் மக்கள்
அக்கிரமம் அழிக்கத் திரண்டனர்
உக்கிரமானது உலகப் புரட்சி
உழைக்கும் நேரம் எட்டுமணியானது
உரிமையைப் போராடி வென்றனரே!

உதிரத்தை உழைப்பாக்கி உலகத்தை உயர்த்தும்
உண்மைத் தொழிலாளியை உள்ளத்தால் வணங்குவோம்
உலகுக்கு உணவளிக்கும் உழவர்களைக் காப்போம்
உழைப்பாளி இல்லை என்றால் உலகில்
வெறும் கல்லும் மண்ணும்தான் மிஞ்சும்
உழைப்போரை மதிப்போம் உயர்த்துவோம் வாழ்வை.

பாரையே வடிவமைக்கும் பாட்டாளி
பாரில் திரண்டால் பாரழியும்
கைகட்டி வாய்பொத்திய காலம்போதும்
கரமுயர்த்தி உரிமைக் குரலெழுப்பி
உன்னுரிமை உயிர் நாடியே!
உழைப்போம் உரிமை பெறும்வரை.

சுரண்டும் வர்க்கம் உனைச்சுரண்டி
உறிஞ்சுவது தோழா உன்குருதி
வீழ்ந்தே கிடந்து அடிதொழுது
வீணாய் வாழ்வை அழிக்காதே.

கல்லைச் சுமந்தாலும் கள்ளமிலாக் கூட்டம்
மண்ணைச் சுமந்தாலும் மானமுள்ள மக்கள்
எடையைக் குறைக்க நடக்கும் கூட்டமது
உணவிற்காய் உழைக்க நடக்கும் கூட்டமிது
உழைத்துக் களைத்து நெல்லைச் செய்தனர்

ஒருவேளைக் கஞ்சிக்கே கையேந்தி நின்றனர்
பட்டுத் துணிகளைப் பகட்டாய்ச் செய்தனர்
பருத்தித் துணிக்கே பரிதவித்து நின்றனர்
என்று தணியுமிவர் வாழ்வின் சோகம்?

உனது வியர்வைத் துளிகள் ஒவ்வொன்றும்
உன்னை மட்டுமல்ல உலகையும் உயர்த்தட்டுமே!
ஒவ்வொரு கைப்பிடிச் சோறும் உண்ணும்போதும்
நீங்கள் இவர்களை நினைத்துப் பாருங்கள்
உணவை ஒருபோதும் வீணாக்க மாட்டீர்கள்
உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
வீணேஉண்டு களிப்போரை நிந்தனை செய்வோம்.

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

கனடிய செய்திகள் Canadian News

# 'EARTH DAY Community Cleanup' initiated by Community Activist Deepak Talreja on April 19th, 2025 at Riverwalk Park in Markham

## மார்க்கம் நகரில் சமூகச் செயற்பாட்டாளர் Deepak Talreja அவர்களால் ஏற்பாடு செய்யப்பெற்ற "உலக பூமி தினம்" கொண்டாட்டம் சார்ந்த "சுத்திகரிப்புத் திட்டம்"

கடந்த பல வருடங்களாக மார்க்கம் நகரில் சமூக மற்றும் அரசியல் நிகழ்வில் எப்போதும் சமூகமளித்து தீவிரமான செயற்பட்டும் தமிழ்ச் சமூகத்தோடு நெருங்கிய தொடர்பைக் கொண்டவருமான சமூகச் செயற்பாட்டாளர் Deepak Talreja அவர்களால் ஏற்பாடு செய்யப்பெற்ற "உலக பூமி தினம்" கொண்டாட்டம் சார்ந்த "சுத்திகரிப்புத் திட்டம்" கடந்த சனிக்கிழமை 19ம் திகதி மதியத்திற்குப் பின்னர் நடைபெற்றது.

மார்க்கம் நகரில் உள்ள Riverwalk Park அமைந்துள்ள வட்டாரத்தைச் சுற்றி மேற்கொள்ளப்பட்ட இந்த அரிய சுத்திகரிப்புத் திட்டத்தை மக்கள் அனைவரும் பாராட்டினார்கள்.





மேற்படி நிகழ்வில் உதயன் பத்திரிகை மற்றும் தேசம் மாத இதழ் ஆகியவற்றின் சார்பில் பலர் கலந்து கொண்டு சுத்திகரிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர் அத்துடன் மார்க்கம் முதியோர் மன்றம் - பொக்ஸகுருவ் முதியோர் மேம்பாட்டு மன்றம் - கிறீன்பொறொ முதியோர் மேம்பாட்டு அமைப்பு ஆகியவற்றின் சார்பிலும் அங்கத்தவர்கள் கலந்துகொண்டு Deepak Talreja அவர்களுக்கு தங்கள் ஆதரவைத் தெரிவித்தார்கள்.

நூற்றுக்கும் மேற்பட்ட தொண்டர்கள் கலந்து கொண்ட இந்த சுத்திகரிப்புத் திட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் திருப்தியுடன் வீடு சென்றனர்.







கனடிய செய்திகள் Canadian News

## "நிலக்கிளி" நாவல் புகழ் அ. பாலமனோகரன் அவர்களின் "நிலக்கிளி" ஆங்கிலப் பதிப்பு மற்றும் மிஸ்டர் மங் ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா கனடாவில் சிறப்பாக நடைபெற்றது



இன்றிலிருந்து சுமார் 52 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் வீரகேசரிப் பதிப்பாக வெளிவருந்து இலட்சக் கணக்கான வாசகர்களின் பாராட்டுக்களைப் பெற்ற "நிலக்கிளி" நாவல் புகழ் அ. பாலமனோகரன் அவர்களின் "நிலக்கிளி" ஆங்கில மொழி மூல பதிப்பு மற்றும் மிஸ்டர் மங் ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா கனடாவில் சிறப்பாக நடைபெற்றது.

தற்பொழுது டென்மார்க் தேசத்தில் தனது துணைவியார் சகிதம் வாழ்ந்து வரும் புகழ்பெற்ற எழுத்தாளரும் இன்னும் தொடர்ச்சியாக எழுத்துலகில் சஞ்சரித்து வருபவருமான அ. பாலமனோகரன் அவர்களைக் கொண்டாடும் முகமாகவும் அவரைப் பாராட்டும் வகையிலும் மேற்படி விழாவை கனடாவில் வெற்றிகரமாக சேவைநோக்கோடு இயங்கிவரும் "வன்னிச் சங்கம் - கனடா சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது.

"வன்னிச் சங்கம் - கனடா அமைப்பின் தலைவர் சிவா இரத்தினசிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழா ஸ்காபுறோவில் அமைந்துள்ள ஸ்ரீ சத்திய சாயி பாபா வழிபாட்டு மன்றத்தின் மண்டபத்தில் நடைபெற்றது.

பல்வேறு உரைகளை திருவாளர்கள் ஐ. சி. அம்பிகாவரன். தங்கராசா சிவபாலு. ஆர்.என். லோகேந்திரலிங்கம், கலாநிதி நா. சுப்பிரமணியன், பேராதரன் பாலசிங்கம். சபா .இராஜேஸ்வரன் மற்றும் திருமதிகள் கலாநிதி பார்வதி கந்தசாமி, லலிதாமணி வரதராஜா, கலாநிதி மைதிலி தயாநிதி , கலாநிதி செல்வநாயகி ஸ்ரீதாஸ் உட்படசிலர் வழங்கினார்கள்.

மேற்படி நிகழ்வில் எழுத்தாளர் அ. பாலமனோகரன் அவர்களின் நன்றியுரை இடம்பெறுவதற்கு முன்னர் அவர் பல்வேறு அன்பர்களால் கௌரவிக்கப்பெற்றார்

அங்கு உரையாற்றிய கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எழுத்தாளர் பாலமனோகரன் அவர்களின் படைப்பாற்றல் பற்றியும் உலகின் பல நாடுகளில் அவர் கௌரவிக்கப்பெற்ற விபரங்களையும்" வன்னிச் சங்கம் - கனடா" வின் மனிதாபிமான சேவைகளையும் பாராட்டினார்.




















- செய்தி: சத்தியன்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ் மத்தியின் மைந்தனாய், யாழ் இந்துவின் வீரனாய் பிரகாசித்த பல்துறை ஆளுமையாளர் வி.ரி. சிவலிங்கம் அவர்கள் மறைந்தார்!



- ஐங்கரன் விக்கினேஸ்வரா

(இடர் மிகுந்த போர்க் காலத்தில் யாழ்ப்பாணம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு நிர்வாகியாக இருந்த வி.ரி. சிவலிங்கம் 1992 முதல் 2000 வரை பல ஆண்டுகள் சேவை நடவடிக்கைகளின் பொது நிர்வாகியாக பணியாற்றினார்)

வட புலத்தின் விளையாட்டுத்துறை சார் ஆளுமைகளுள் குறிப்பிடத்தக்கவரான வி.ரி. சிவலிங்கம் ளை 18-04-2025 அன்று யாழ்ப்பாணத்தில் காலமானார்.

விளையாட்டுத் துறையோடு சட்டக் துறையிலும் இணைந்து கொண்ட வி.ரி. சிவலிங்கம் யாழ் மண்ணில் ஆளுமை மிகுந்தவராக விளங்கினார். இறுதிக் காலங்களில் யாழ்ப்பாணம் நீதிமன்ற பதில் நீதவானாகவும் கடமையாற்றி வந்தார்.

இவர் விளையாட்டுத் துறையில் துடுப்பாட்டம், கால்பந்தாட்டம், நீளம்பாய்தல், உயரம் பாய்தல் என பல்வகை ஆளுமை கொண்டவராக இளமையில் விளங்கினார். அன்றைய காலகட்டத்தில் பல்வேறு தடகள சாதனைகளுக்குச் சொந்தக்காரராகவும் திகழ்ந்தார்.

புகழ்பூத்த விளையாட்டு பரம்பரை:

சட்டக் கல்லூரியில் பயின்று சட்டத்தரணியாக இணைந்த போதும் தனது விளையாட்டுத்துறை மீதான ஈடுபாடுகளைக் குறைத்துக் கொள்ளாத இவர் மரணிக்கும் வரை இலங்கையில் சிறந்த விளையாட்டு வீரராகவும், நீண்ட கால சட்டத்தரணியாகவும் திகழ்ந்தார்.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்த வி.ரி. சிவலிங்கம் 1939 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி வி. தம்பி என்பவருக்கு மகனாகப் பிறந்தார். ஆறு சகோதரர்களுடனும் ஒரு சகேதரரியுடனும் எண்மரில் ஒருவராய் வி.ரி. சிவலிங்கம் வாழ்ந்தார்.

தனது கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் பெற்றுக் கொண்ட இவர் விளையாட்டுத் துறையில் பல்வேறு சாதனைகளை நிலைநாட்டி கல்லூரிகளுக்கும் யாழ்ப்பாண மண்ணுக்கும் பெருமை சேர்த்தார்.

இலங்கை சட்டக் கல்லூரி சட்டத்தரணி:

உயர் கல்வியின் பின்னர் இலங்கை சட்டக் கல்லூரியில் பயின்று சட்டத்தரணியாக 1962 - 1966 கால கட்டத்தில் இருந்து வந்தார். பின்னர் கொழும்பு தொழில் திணைக்களத்தின் வழக்குரைஞர் அதிகாரியாக ஜனவரி 1966 - டிசம்பர் 1974 வரை எட்டு ஆண்டுகள் பணியாற்றினார்.

விளையாட்டுத்திறன் என்பது நியாயமான விளையாட்டு, நெறிமுறை நடத்தை மற்றும் ஒருமைப்பாடு மற்றும் எதிராளியிடம் பொதுவான நல்லெண்ணம் பற்றிய புரிதல் மற்றும் அர்ப்பணிப்பு மிக்கதாகும்.

வி.ரி. சிவலிங்கம் ஒரு தடகள வீரராக முன்னோக்கைக் கொண்டிருக்கவும், சமநிலையைப் பராமரிக்கவும், தனது சக வீரர்களுக்கு சிறந்ததைச் செய்யவும் போதுமான திறமையுடன் விளங்கினார்.

எந்த ஒரு அழுத்த சூழ்நிலையிலும் பொருத்தமான நடத்தைத் தேர்வுகளைச் செய்ய முடிவது பெரும்பாலும் ஒரு வீரரின் குணத்தையும் ஒரு நல்ல விளையாட்டாக இருப்பதற்கான அவரது திறனையும் வெளிப்படுத்தும்.

எளிமையாகச் சொன்னால், இத்தகைய விளையாட்டுத்திறன் மறைந்த வி.ரி. சிவலிங்கம் அவர்களிடம் காணக்கூடியதாக இருந்தது.

சர்வதேச தடகள நடுவர்:

சிறந்த விளையாட்டு வீரரான வி.ரி. சிவலிங்கம், யாழ்ப்பாணம் அமெச்சூர் தடகள சங்கத்தின் தலைவராகவும், இலங்கை அமெச்சூர் தடகள சங்கத்தின் துணைத் தலைவராகவும் பல ஆண்டுகள் பணியாற்றி இருந்தார்.

1980 இல் பாங்காக்கில் சர்வதேச ஒலிம்பிக் குழு மற்றும் சர்வதேச அமெச்சூர் தடகள கூட்டமைப்பு நடத்திய உயர் மட்ட தடகள பயிற்சி கிளினிக்கில் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்.

இரண்டு ஆண்டுகள் தடகளத்திற்கான தேசிய தேர்வாளராகவும், இலங்கை யு.யு.யு இன் ஒழுங்குமுறைக் குழு மற்றும் அரசியலமைப்பு குழுவின் தலைவராகவும் இருந்தார்.

அவர் இலங்கை ஏ.ஏ.ஏ.வின் தகுதிவாய்ந்த நடுவர், மேலும் கொலம்போவில் நடைபெற்ற எஸ்.ஏ.எ.ஃப் விளையாட்டுப் போட்டிகளில் தலைமை நடுவராகப் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ் ரோட்டரி சங்க தலைவர்:

யாழ்ப்பாண ரோட்டரி சங்கத்தின் நீண்ட கால வரலாற்றில் முதல் முறையாக, இந்த சங்கத்தைச் சேர்ந்த ஒரு ரோட்டேரியன், இங்கிலாந்தின் பர்மிங்காமில் உள்ள ஹான்ஸ்.ஃபோர்டு ரோட்டரி சங்கம் மூலம் ரோட்டரி இன்டர்நேஷனலின் பால் ஹாரிஸ் .ஃபெலோ விருதைப் பெற்றுள்ள பெருமை மறைந்த வி.ரி. சிவலிங்கம் அவர்களுக்கு சாரும்.

வி.ரி. சிவலிங்கம் கடந்த ஐம்பது ஆண்டுகளாக ரோட்டரியில் உள்ளார். கிளிநொச்சி-பரந்தன் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினராகவும், இரு ஆண்டுகள் இந்த சங்கத்தின் தலைவராகவும் இருந்தார். யாழ்ப்பாண ரோட்டரி சங்கத்தின் தலைவராகவும் இரு ஆண்டுகள் இருந்தார்.

1993 ஆம் ஆண்டு யாழ்ப்பாண ரோட்டரி சங்கத்தின் தலைவராக அவர் பதவி வகித்த காலத்தில், ரோட்டரி சங்கத்தின் நிறுவனர் பவுலின் பிறந்தநாளைக் குறிக்கும் முதல் நாள் தபால் அட்டை வெளியிடப்பட்டது.

போரினால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண நகரத்தில் ஏப்ரல் 1993 இல் இலங்கை தபால் தலை சேகரிப்பு பணியகத்தால் இந்த அட்டை வெளியிடப்பட்டது.

இந்த முதல் நாள் அட்டை சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றதுடன் மற்றும் ரோட்டரி சர்வதேசத்தின் தலைவர் மற்றும் ரோட்டரியில் உள்ள பல உலகத் தலைவர்களால் நன்கு பாராட்டப்பட்டது.






செஞ்சிலுவைச் சங்கக் நிர்வாகி:

இடர் மிகுந்த போர்க் காலத்தில் யாழ்ப்பாணம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு நிர்வாகியாக இருந்தார். ஜனவரி 1992 முதல் டிசம்பர் 2000 வரை ஒன்பது ஆண்டுகள் சேவை நடவடிக்கைகளின் பொது நிர்வாகியாக பணியாற்றினார்.

வெற்றி என்பது வேடிக்கையானது. அது கடின உழைப்புக்குக் கிடைக்கும் வெகுமதியாகும். முடிவுகளை வைத்திருக்கும் ஒரு விளையாட்டில் பங்கேற்கும்போது, விளையாட்டின் விதிகளுக்கு உட்பட்டும், விளையாட்டின் உணர்விற்கு உட்பட்டும் வெற்றி பெறுவதற்கு முடிந்த அனைத்தையும் செய்வது அணிக்கு கடமையாகும். வெற்றி என்பது ஒரு அணியின் ஒரே இலக்காக இருக்கும்போது அது எதிர்மறையாக மாறும் என்பதை அறிய வேண்டும்.

வெற்றி என்பது சரியானவர் என்றோ அல்லது மீண்டும் வெற்றி பெறுவீர்கள் என்றோ அர்த்தமல்ல. வெற்றியைக் கொண்டாடுங்கள். ஆனால் வெற்றியை கருணையுடன் கொண்டாடுங்கள்.

நீங்கள் தோற்கடித்த அணி மீது இரக்கம் கொள்ளுங்கள். பணிவு மற்றும் தரத்துடன் வெற்றி பெறுங்கள். எதிரிகளின் முயற்சியையும் அவர்கள் தகுதியான போட்டியாளர்கள் என்பதையும் ஒப்புக் கொள்ளுங்கள் என்பார் வி.ரி. சிவலிங்கம் அவர்கள்.

யாழ் மண்ணில் சட்ட சேவையை ஜனவரி 2000 முதல் இறக்கும் வரை கடந்த 25 ஆண்டுகளாக சட்டத்தரணி - நோட்டரி பொது/மேலாண்மை ஆலோசகராகும் பணிபுரிந்து வந்தார் என்பது நினைவிருக்கலாம்.

வி.ரி.மகாலிங்கம் பிறிமியர் லீக்:

இலங்கையின் புகழ்பூத்த விளையாட்டுததுறை ஆளுமைகளுள் ஒருவரும், தசாப்தம் பல தாண்டிய வீரனுமாகிய வி.ரி மகாலிங்கம் ஞர்பகார்த்தமாக வி.ரி. மகாலிங்கம் பிறிமியர் லீக் 20-20 துடுப்பாட்டத் தொடர் 2017 ஆண்டு முதல் நடைபெறுவதற்கு முன்னோடியாக விளங்கியவர் வி.ரி.சிவலிங்கம் ஆவார்.

யாழ்மாவட்ட கிரிக்கெட் சங்கமும், வி.ரி.மகாலிங்கத்தின் குடும்பத்தினரான அவரது சகோதரர் வி.ரி.சிவலிங்கத்தின் அனுசரணையுடன் இந்த கிரிக்கெட் சுற்றுத் தொடர் 2017 ஆண்டு முதல் நடத்த தீர்மானிக்கப்பட்டது.

வி.ரி. சிவலிங்கம் இலங்கையின் மூத்த சட்டத்தரணிகளுள் ஒருவராகத் திகழ்ந்த அவரது முழுமையான நிதிப்பங்களிப்புடன் இந்தப் போட்டிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

2017 ஆம் ஆண்டுக்கான "வி.ரி.மகாலிங்கம் பிறிமியர் லீக் சுற்றுப் போட்டியில்" இறுதியாட்டத்துக்கு யாழ். பல்கலைக்கழக அணியும் திருநெல்வேலி ரி.சி.சி விளையாட்டுக் கழக அணியும் தெரிவாகின.

அரையிறுதிப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து சென்றலைற் விளையாட்டுக் கழகமும் திருநெல்வேலி ரி.சி.சி அணியை எதிர்த்து அரியாலை மத்திய விளையாட்டுக் கழக அணியும் மோதின.

யாழ் மண்ணில் விளையாட்டுத் துறையின் வழிகாட்டியாய் திகழ்ந்த ஓர் பல்துறை ஆளுமையாளரை தற்போது இழந்துள்ளது.

யாழ் மத்திய கல்லூரியின் மைந்தனாகவும், யாழ் இந்துக் கல்லூரியின் வீரனாகவும் விளங்கிய வி.ரி.சிவலிங்கம் விளையாட்டுத்துறை சமூகத்தில் பெருஞ் சோகத்தினை ஏற்படுத்தி உள்ளது.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி aches | Stress, Migraine & All Types of Head- |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# தமிழ் மக்கள் மீது அக்கறையுள்ள ஜனாதிபதி இதுவரை, அரசியல் கைதிக ளின் தொடர்பாக அக்கறை கொள்ளவில்லை என்கிறார் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

- எஸ்.ஆர்.லெம்பேட் (22-04-2025)



ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து 6 மாதங்களை கடக்கின்றது. இந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயங்களில் கவனம் செலுத்தவில்லை. தமிழ் மக்கள் மீது அக்கறை கொண்டவர்கள் என்று சொல்லுகிறவர்கள் அதை கவனத்தில் எடுக்கவில்லை. ஐ.நா.சபை தீர்மானத்தை உடனடியாக கூறினீர்கள் அதை அமுல் படுத்த முடியாது என்று.இது தான் தமிழர்கள் மீது நீங்கள் காட்டுகிற அக்கறை யா?. என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக மன்னார் நகர சபை,மன்னார் பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு 22-04-2025 அன்றையதினம் செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணியளவில் மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது வேட்பாளர்களை ஆதரித்து உரை நிகழ்த்து கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் உள்ள நகர சபை மற்றும் பிரதேச சபைகளுக்கான தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பாக போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரும் திறமையானவர்களாக காணப்படும் நிலையில் குறித்த சபைகளை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே கைப்பற்றும்.

ஜே.வி.பி.அரசாங்கம் தொடர்பாக பல்வேறு தரப்பினரும் விமர்சனம் செய்து வருகின்றனர். ஜனாதிபதி கடந்த வாரம் தேர்தல் பிரச்சார கூட்டத்திற்கு மன்னார் வருகை தந்து உரை நிகழ்த்தினார். உள்ளூராட்சி மன்ற தேர்தல்களின் போது உள்ளூராட்சி சபைகளை ஆட்சி அமைப்பது தமது கட்சியாக மாத்திரம் இருந்தால் எவ்வித பாரபட்சம் இன்றி நிதியை ஒதுக்குவதாக தெரிவித்தார்.

மக்களை ஏமாற்றி மற்றவர்களுக்கு வாய்ப்பு வழங்கக்கூடாது என்பதே அவரின் செய்தியாக உள்ளது. அவரது கருத்தை பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் எதிர்த்தார்கள். இலஞ்சத்தை கொடுத்து ஜனாதிபதி மக்களை ஏமாற்றுகிறார்.

எனவே ஜனாதிபதி அவர்கள் எவ்வாறு இந்த நாட்டில் ஊழலை ஒழிக்க முடியும். ஜனாதிபதிக்கு ஆதரவாக அமைச்சர் விமல் ரத்நாயக்க ஒரு படி குரலை உயர்த்தி கூறுகிறார் ஜனாதிபதியினுடைய கூற்றிற்கு எதிர்ப்பை தெரிவிப்பதற்கு தமிழ்த் தலைவர்கள் அருகதையற்றவர்கள் என தெரிவித்துள்ளார்.





கடந்த பாராளுமன்ற தேர்தலின் போது ஜனாதிபதியின் கட்சிக்கு அதிக அளவான ஆசனங்களை வடக்கு மக்கள் வழங்கி உள்ளனர்.

அதை வைத்துக் கொண்டு தமிழ்த் தலைமைகள் பேசுவதற்கு வல்லமை அற்றவர்கள் என்று சொல்லுவதற்கு விமல் ரத்நாயக்க வுக்கு என்ன யோக்கியம் உள்ளது என்று நான் கேட்க விரும்புகின்றேன்.

ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து 6 மாதங்களை கடக்கின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயங்களில் கவனம் செலுத்தினீர்களா?, தமிழ் மக்கள் மீது அக்கறை கொண்டவர்கள் என்று சொல்லுகிறவர்கள் நீங்கள் அதை கவனத்தில் எடுத்தீர்களா? ஐ.நா.சபை தீர்மானத்தை உடனடியாக கூறினீர்கள் அதை அமுல் படுத்த முடியாது என்று.இது தமிழர்கள் மீது நீங்கள் காட்டுகின்ற அக்கறையா?.

பாராளுமன்றத்திலும், வெளியிலும் அரசியல் கைதிகள் சிறைகளில் இல்லை என்று கூறினார்கள். இது தான் நீங்கள் தமிழர்கள் மீது காட்டுகின்ற அக்கரை?. தமிழ் தலைவர்கள் அதற்கு எல்லாம் குரல் கொடுத்தால் நீங்கள் பேச முடியாது என அதிகார வர்க்கத்துடன் தெரிவிக்கிறார்கள். அரசாங்கத்தை எதிர்க்கும் வகையில் தென் பகுதியில் சிங்கள தலைவர்கள் வாரி தூற்றுகின்ற நிலையில் அமைச்சர் விமல் ரத்நாயக்க அவர்களை பார்த்து எதுவுமே கதைக்கவில்லை.

ஆனால் தமிழ் தலைவர்களை பார்த்து அவர் கூறுகிறார் நாங்கள் கரைப்பதற்கு அருகதை அற்றவர்களாம்.எனவே எங்களை பற்றி கதைப்பதற்கு விமல் ரத்நாயக்க வுக்கு எந்த அருகதையும் இல்லை என தெரிவித்துள்ளார்.

குறித்த கூட்டத்தில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் எஸ்.ஆர். குமரேஸ், தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின் உயர் பீட உறுப்பினர் லுஸ்ரின் மோகன்ராஜ், கட்சியின் மாவட்ட அமைப்பாளர் டானியல் வசந்தன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

கனகராசா சரவணன்

# ஜே.வி.பி.யின் கொள்கையினை பின்பற்றிச் செல்லும் தமிழரசுக்கட்சியை நாம் ஆதரிக்க வேண்டுமா? தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும் என்கிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



ஜே.வி.பி.யை பிழையென்று பிரசாரம் முன்னெடுக்கும் தமிரசுக்கட்சி ஜே.வி. பி.யின் ஒற்றை ஆட்சிக்கு ஆதரவு வழங்குகின்றது. அவ்வாறானால் ஜே.வி.பி. பிழையென்றால் ஜே.வி.பி.யின் கொள்கையினை பின்பற்றிச் செல்லும் தமிழரசுக்கட்சி சரியா? என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும் என அகில இலங்கை தமிழ் காங்கிரசின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கல்குடா தேர்தல் தொகுதியில் ஏறாவூர்ப்பற்று பிரதேச சபைக்கான வேட்பாளர் அறிமுக கூட்டம் 22ம் திகதி செவ்வாய்க்கிழமை களுவன்கேணியில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி மற்றும் தமிழ் மக்கள் பேரவை என்பன இணைந்து இம்முறை கிழக்கில் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் களமிறங்கியுள்ள வேட்பாளர்களின் அறிமுக கூட்டம் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தலைமையில் இடம்பெற்றுது.

இதில் அகில இலங்கை தமிழ் காங்கிரசின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் சிரேஸ்ட சட்டத்தரணி சிறிகாந்தா, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செ.கஜேந்திரன், முன்னணியின் உறுப்பினர் சட்டத்தரணி சுகாஸ் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர். இதன்போது உரையாற்றிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்வாறு தெரிவித்தார்.

இறுதியாக நடைபெற்ற பாராளுமன்ற தேர்தல் தமிழ் மக்களை தமிழ் தேசிய நிலைப்பாட்டிலிருந்து விலகவைத்துள்ளதாக இலங்கையில் உள்ள தூதரகங்கள் கூறிவருகின்றன. அதற்கு பலவிதமான பதில்களை சொல்லி வருகின்றோம்.

மக்கள் சக்தி என்ற பெயரில் ஆட்சி செய்கின்ற ஜே.வி.பி. என்கின்ற அமைப்பு வடகிழக்கில் தமிழ் மக்களின் ஆணையைப் பெறவில்லையென்பதை தெளிவாக கூறிவருகின்றோம்.

அடுத்த தேர்தலில் தமிழ் மக்கள் தங்களது தமிழ் தேசிய கொள்கையில் உறுதியாக நிற்கின்றார்கள் என்பதை தெளிவாக வெளிப்படுத்தச் சொல்லுங்கள் என்று எங்களிடம் பல்வேறு நாட்டின் தூதரகங்கள் கோரியுள்ளன.





ஜே.வி.பி.யினர் தெற்கில் 70 வீதமான வாக்கினைப் பெற்றவர்கள். அதே அலை வடகிழக்கின் தமிழர் தாயப் பகுதியிலும் கூட அவர்களுக்கான ஆதரவு கிடைத்திருக்கலாம் என்பதில் நியாயமுள்ளது. அதனை முறியடிக்கும் பொறுப்பு எங்களிடமே இருக்கின்றது.

தமிழ் மக்கள் கடந்த பாராளுமன்ற தேர்தலில் விட்ட தவறை உணர்ந்து அடுத்த தேர்தலிலே தமிழ் தேசிய நிலைப்பாட்டை நிலைநாட்டக் கூடிய வகையிலே வாக்குகளை பயன்படுத்த வேண்டும்.

கடந்த தேர்தலில் எங்களுடைய மக்கள் தவறுதலாக எங்கள் மக்கள் வாக்குகளை பயன்படுத்தி ஜே.பி.பி என்ற இந்த இனவத கட்சிக்கு ஏதே ஒரு தமிழ் மக்கள் ஆணை கொடுத்திருக்கின்றனர் என்ற அந்த தவறான பட்தை திருத்துவதாக இருந்தால் நடைபெறவுள்ள இந்த தேர்தலில் அந்த பிழையான காட்சியை திருத்த வேண்டும்.

இந்த ஜே.பி.வி யை பிழையான தவறாக ஏன் கூறுகின்றோம் என ஆழமாக விளங்கி கொள்ள வேண்டும் மற்ற சிங்கள கட்சிகள் தமிழ் பகுதியில் வந்து வாக்கை பெறுவதை ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம் ஏன் என்றால் அவர்கள் வெளிப்படையாக இனவாத நிகழ்சி நிரலை கொண்டவர்கள் என அனைத்து தமிழ் மக்களுக்கு தெரியும் அதைவிட தென்தமிழீழ மக்களுக்கு நன்றாக தெரியும்.

தமிழ் தாயகத்தை இன்று கேள்விக்கு உட்பட்ட சூழ்நிலையில் வாழ்வதாக இருந்தால் அது தென்தமிழீ மண்ணில் வாழுகின்ற மக்களுடைய நிலமை அதற்கான அடிக்காரணம் இந்த மண்ணைதான் திட்டமிட்ட வகையிலே மாறிவந்த ஐக்கிய தேசிய கட்சியாக இருக்கலாம் ஸ்ரீ சுதந்திர கட்சி மற்றும் ஏனைய சிங்கள கட்சிகள் உட்பட பலகட்சிகள் இணைந்து கடந்த 76 வருடமாக சிங்கள மயமாக்கல் பௌத்த மயமாக்கல் மூலம் கிழக்கு மாகாணத்தை திட்டமிட்ட வகையில் அழித்துள்ளனர்.

இது அனைத்தும் அபிவிருத்தி என்ற பேரிலே கல்லோயா திட்டம், மகாவலி திட்டம், தற்போது மாதுறு ஓயா திட்டம் என்பன திட்டமிட்ட வகையில் அபிவிருத்தி என தெரிவித்து தெற்கு சிங்கள மக்களுக்கு இலாபம் கொடுக்கும் வகையில் அவர்களை கொண்டுவந்து குடியேற்றி மாற்றியமைக்கும் திட்டத்தை செய்துள்ளனர்.

இந்த 76 வருடத்தில் ஜே.வி.பி ஒருநாளும் நாட்டை ஆட்சி செய்ய வில்லை எனவே அவர்களைபற்றி பெரியளவில் தெரியாது அதனால் தெற்கில் ஒரு அலையடிக்க அந்த அலையைப்பார்த்து ஒரு சிலராவது இதுவரைக்கும் ஜே.வி. பிக்கு வாக்களிக்காத வடகிழக்கு மணில் வாக்குகள் வீழ்ந்தது இது உண்மை என்றார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் சுமுகமாக நடைபெறும் உள்ளாட்சித் தேர்தல் அஞ்சல் வாக்கெடுப்பு!

பு. கஜிந்தன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் அஞ்சல் மூல வாக்களிப்பு சுமுகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு அன்றையதினம் (24.04.2025) ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

யாழ்பாண மாவட்டத்தில் 21,064 பேர் அஞ்சல் மூலம் வாக்களித்கத் தகுதிபெற்றுள்ளதுடன் 292 வாக்களிப்பு நிலையங்களில் அஞ்சல் மூல வாக்களிப்பு நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

25.04.2025 அன்று அஞ்சல் மூல வாக்களிப்பு நடைபெறுவதுடன், அஞ்சல் மூலம் வாக்களிக்கத் தவறியவர்களுக்கான இறுதிச் சந்தர்ப்பமாக 28.04.2025 மற்றும் 29.04.2025 ஆகிய திகதிகளிலும் வாக்களிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை தொழுநோயாளர் மறுவாழ்வு சங்கத்தின் கிராமமட்ட சங்கங்களின் வருடாந்த மீளாய்வு கூட்டம்!




காவேரி கலா மன்றத்தின் வழிகாட்டலில் இலங்கை தொழுநோயாளர் மறுவாழ்வு சங்கத்தின் கிராமமட்ட சங்கங்களின் வருடாந்த மீளாய்வு கூட்டமானது 23ம் திகதியும் 24ம் திகதியும் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

கூட்டத்தில் வடகிழக்கு மாகாணங்களில் 22 சங்கங்களின் பிரதிநி-



திகள் கலந்து கொண்டதுடன் 2024ஆம் ஆண்டு தனது சங்கங்களின் செயற்பாட்டு மீளாய்வும், 2025 தொடக்கம் 2026 ஆம் ஆண்டுகளுக்கான செயற்பாட்டு விடயங்களும் குறித்து ஆய்வு நடாத்தப்பட்டு திட்ட அறிக்கைகளும் திட்ட முன்மொழிவுகளும் முன்வைக்கப்பட்டன. மேலும் மாவட்டமட்ட சங்கங்களின் மாநாட்டுக்கான ஆயத்தப்படுத்தல்கள் நிகழ்வுகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

இலங்கை தொழுநோயாளர் மறுவாழ்வு சங்கம் தேசிய மட்டத்தில் இலங்கை முழுவதும் தொழுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக அவர்களின் நலன் சார்ந்த விடயங்களுக்காக மாவட்ட மற்றும் கிராமமட்ட செயற்குழுக்களை அமைத்து அவர்களின் தேவைகளுக்காக சேவைகளை வழங்கி வருகின்றது.

உலக சுகாதார நிறுவனம் தொழில்நுயாளர் சங்கங்களின் வினைத்திறனான செயற்பாடுகளால் மட்டுமே தொழுநோய் பரவுவது கட்டுப்பாட்டுக்கான ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்க முடியும் என்பதை வலியுறுத்தி வருகின்றது. இந்த அறிவுறுத்தலின் அடிப்படையில்தான் இலங்கை தொழுநோயாளர் சங்கம் தேசிய மற்றும் மாவட்ட மற்றும் கிராம மட்டங்களில் ஏனைய சுகாதார மற்றும் சமூக சேவை அமைப்புகளிட இணைந்து செயலாற்றி வருகின்றது இதன் அடிப்படையில் கிராமம் மட்ட தொழு நோயாளர் மறுவாழ்வு சங்கங்களின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் உயிரிழப்பு!

இலங்கை செய்திகள் Sri Lanka News

யாழ்ப்பாணத்தில் இரண்டு நாட்கள் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் 24ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் உயிரிழந்துள்ளார். இதன்போது அச்சுவேலி - தம்பாலை பகுதியை சேர்ந்த அப்புத்துரை கருணாகரன் (வயது 57) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபருக்கு கடந்த 21ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டது. இந்நிலையில் அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி இன்றையதினம் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

நிமோனியா காய்ச்சல் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.


# யாழ்ப்பாணத்தில் குடும்பப் பெண் ஒருவர் திடீரென உயிரிழப்பு!

24ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் யாழ்ப்பாணத்தில் குடும்ப பெண்ணொருவர் வீட்டு கிணற்று தொட்டியடியில் இறந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கீரிமலை - கூவில் பகுதியைச் சேர்ந்த டேவிட் குணவதி என்ற குடும்ப பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த பெண்ணும் கணவனும் அவர்களது வீட்டில் வசித்து வந்துள்ளனர். இவ்வாறான சூழ்நிலையில் அவருக்கு முதல்நாள் உடல் சுகயீனம் ஏற்பட்டதால் பனடோல் வாங்குவதற்காக கணவனை கடைக்கு அனுப்பினார்.

கணவன் பனடோலை வாங்கி கொண்டு வீடு வந்தவேளை மனைவி தண்ணீர் தொட்டியடியில் சடலமாக காணப்பட்டதை அவதானித்தார்.

அவரது சடலம் மீட்கப்பட்டு உடற்கூற்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் அவர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்ததாக உடற்கூற்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.







# இவ்வார ராசிபலன்

**25-04-2025 வெள்ளி தொடக்கம் 01-05-2025 வியாழன் வரையும்**




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மேஷம்:** பிரார்த்தனை நிறைவேறும் வாரம். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். கால்நடைகளால் லாபம் உண்டு. கவலைகள் விலகும். கலைத்தொழில் லாபம் தரும். திடீர் திருப்பம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. முயற்சிகள் வெற்றியை தரும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். அதிகாரம் உயரும். பயணம் அனுகூலம் தரும். தொழில் போட்டி அதிகமாகும். புதிய கடன் உருவாகும். கணவன், மனைவி அன்யோன்யம் உண்டு. உத்தியோக உயர்வு கிட்டும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். வாகன செலவுகள் அதிகரிக்கும். பெற்றோர்களின் ஆதரவு கிட்டும். திருப்பங்கள் நிறைந்த காலம். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வீண் விரயம் தவிர்க்கவும். வியாபார விருத்தி ஏற்படும். பாக்கிகள் வசூலாகும். உறவுகளால் மதிப்பு கூடும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். வணிகத்தொழில் விரிவடையும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பல்வலி வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலிதமாகும். உடல்சோர்வு ஏற்படும். திருஷ்டிகள் விலகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பழையக் கடன் தீரும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். உத்தியோகத்தில் இடமாற்றம் உண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. மனைவியின் கோபம் அதிகரிக்கும். ஏற்றங்கள் அமையும். தோற்றப் பொலிவு கூடும். மாற்றத்தை விரும்புவீர்கள். பெருமைகள் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ ராமர், அதிர்ஷ்ட எண்: 8,4,6,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,X




**ரிஷபம்:** மகிழ்ச்சியும், வளர்ச்சியும் உருவாகும் வாரம். பெருமைகள் கூடும். வழக்குகளில் வெற்றி உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. வரவுகளால் திருப்தி உண்டு. வாழ்க்கையில் மேன்மை உண்டு. வாகனத்தால் செலவு உண்டு. மற்றவர்களால் மேன்மை உண்டு. பெற்றவர்களின் வாழ்த்து உண்டு. கடன் வாங்க நேரிடும். கல்வியில் கவனம் தேவை. குடும்ப குழப்பம் தீரும். பணப்பற்றாக்குறை தீரும். எள் தானம் செய்வதால் ஏற்றங்கள் அதிகரிக்கும். புத்துணர்வோடு செயல்படுவீர்கள். பழைய பாக்கி வசூலாகும். வணிகத்தொழில் வளம் தரும். உறவினர் வருகை உண்டு. உடல்நிலையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். சாதகமான சூழ்நிலைகள் உருவாகும். உதவும் குணம் அதிகரிக்கும். பழையக்கடன் தீரும். புதிய நட்பு உருவாகும். பேச்சில் நிதானம்
தேவை. விபரீத எண்ணம் விலகும். மனம் மகிழும். குளிர்பான தொழில் கவனம் தேவை. செயல் விவேகம் கூடும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். புதிய எண்ணங்கள் உருவாகும். முற்போக்குச் சிந்தனை வரும். வங்கி சேமிப்பு அதிகரிக்கும். சீரான வாழ்வு அமையும். சிந்தனைகள் மேலோங்கும். ஆடம்பர எண்ணங்கள் அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். இனிய தகவல் வந்து சேரும். உறவுகளால் மதிப்பு கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 2,6,9,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,D




**மிதுனம்:** நினைத்ததெல்லாம் நடக்கும் வாரம். உத்தியோக உயர்வு கிட்டும். வியாபார விருத்தி ஏற்படும். வீண் விரயம் தவிர்க்கவும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். முயற்சிகள் பலிதமாகும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். வசந்தம் வீடு தேடி வரும். மனைவியால் மரியாதை உயரும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். சுபச்செய்தி வரும். வாழ்த்துக்கள் கிட்டும். உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. மனநிம்மதி அதிகரிக்கும். பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். உரிய நேரத்தில் உதவிகள் கிட்டும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. இனம் புரியா சந்தோஷம் மனதில் குடிகொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். நம்பிக்கை துளிர்விடும். பழைய பாக்கிகள் வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். பிரார்த்தனை பலன் கொடுக்கும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். புதிய நாட்டம் ஏற்படும். உறவினர் வருகை உண்டு. மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. புதுமையை விரும்புவீர்கள். இடமாற்றம் நன்மை தரும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். செயல்பாட்டின் தீவிரம் கூடும். அலைச்சல் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 8,6,5,9
அதிர்ஷ்ட நிறம்:வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**கடகம்:** எதிரிகள் உதிரியாகும் வாரம். பழைய பகை தீரும். வீண் செலவுகள் அதிகரிக்கும். மங்களச் செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. உத்தியோகத்தில் உயர்வு உண்டு. நண்பர்கள் பாராட்டு கிட்டும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். தர்மச் சிந்தனைகள் மேலோங்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். பிணிகள் நீங்கும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். ஆபரணச் சேர்க்கையுண்டு. இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பொது விஷயங்களில் ஆர்வம் கூடும். சிரமங்கள் குறையும். எண்ணங்கள் நிறைவேறும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். நீண்ட நாளை பிரச்சனை முடிவுக்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். முன்னேற்றமான தருணம். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கலைத்தொழில் லாபம் தரும். கடன் வாங்க நேரிடும். கண்நோய் வந்து போகும். கவலைகள் விலகும். கால்நடைகளால் லாபம் உண்டு. கலையில் ஈடுபாடு அதிகரிக்கும். தொழிலில் லாபம் கூடும். பெண்களுக்கு கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீதேவி, அதிர்ஷ்ட எண்: 1,2,4,7
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,H




**சிம்மம்:** பெத்தவங்க வாழ்த்து கிடைக்கும் வாரம். புதிய சொத்து சேரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். வழக்கு முடிவுக்கு வரும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். குழப்பங்கள் அகலும். வியாபாரத்தில் கவனம் தேவை. நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். பதவி உயர்வு தடைப்படும். வர்த்தக தொழில் லாபம் தரும். மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். புதிய முயற்சியில் கவனம் தேவை. முன்கோபத்தை தவிர்க்கவும். பயணம் பலன் தரும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். புகழும், பொருளும் பெருகும். நன்மைகள் அதிகரிக்கும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் உண்டு. பணப்பற்றாக்குறை தீரும். குடும்ப குழப்பம் நீங்கும். கல்வியில் கவனம் தேவை. தனம் சேரும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பரப் பொருள் சேரும். உடல் சோர்வு ஏற்படும். குடும்ப மேன்மை உண்டாகும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். ஏற்றங்கள் அதிகரிக்கும். தோற்றப்பொலிவு கூடும். மாற்றத்தை விரும்புவீர்கள். மனக்கட்டுப்பாடு அவசியம். பணத்தட்டுப்பாடு நீங்கும். ஆக்கம் அதிகரிக்கும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். வெற்றி வீடு தேடி வரும். விவேகம் கை கொடுக்கும். செல்வச்செழிப்பு உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி, அதிர்ஷ்ட எண்: 6,4,8,1
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,I




**கன்னி:** ஆடம்பர நாட்டம் அதிகரிக்கும் வாரம். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பல்வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பயணம் தடைப்படும். வணிகத்தொழில் விரிவடையும். குடும்ப உறவு பலப்படும். பால் தானம் பாவம் போக்கும். விரயங்கள் அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூர தொடர்பு லாபம் தரும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். பொருளாதாரம் ஏற்றம் பெருகும். முகப்பொலிவு கூடும். உடல்நலம் சிறக்கும். தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப் போடுங்கள். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும். கொடுக்கல், வாங்கலில் சுமூகநிலை ஏற்படும். பாக்கிகள் வசூலாகும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான காலம். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். மன அமைதி கிட்டும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்களில் ஒன்றிரண்டு நடந்தேறும். வெற்றிப் பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். தடைகள் விலகும். நீண்ட நாளைய நோய் விலகும். புதிய தொழில் முயற்சி கைக்கூடும். நண்பர்கள் உதவி கிட்டும். சுபகாரிய நிகழ்ச்சி நடைபெறும். தனலாபம் பெருகும். ஞாபகத் திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. முயற்சிகளில் தாமதம் ஏற்படும். கலைஞர்களுக்கு புகழ் கூடும். சேமிப்பு வளரும். குடும்பத்தில் அமைதி நிலவும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பணவரவு சுமாராக இருக்கும். தந்தை உடல்நலம் கவனம் தேவை. வெளியூர் பயணம் உண்டு. காரியம் வெற்றி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சப்த கன்னிமார்கள், அதிர்ஷ்ட எண்: 9,5,3,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,F




**துலாம்:** பொன், பொருள் சேரும் வாரம். பதவி உயர்வு கிட்டும். நல்ல செய்திகள் நாடி வரும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். எதிரிகளின் தொல்லை குறையும். பயணங்களால் வெகுமதி கூடும். முயற்சிகள் பலன் கொடுக்கும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். பெண்களுக்கு பெருமை சேரும். வாகனத்தில் கவனம் தேவை. பெண்களுக்கு அணிகலன் சேரும். மறைமுக எதிர்ப்புக்கள் குறையும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். காலை நேரத்தில் கவனம் தேவை. மனஅமைதி அதிகரிக்கும். எதிர்பார்த்த விˆயம் தாமதமாகும். எண்ணங்கள் பூர்த்தியாகும். மனமகிழ்ச்சி கிட்டும். பணியாட்கள் ஆதரவுகள் பெருகும். உழைப்பிற்கான பலன் கிடைக்கும். நல்லோர்கள் வாழ்த்து அதிகரிக்கும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கலைத்தொழிலில் கவனம் தேவை. விருந்தினர்கள் வருகை உண்டு. அர்ச்சனை செய்வதால் பிரச்சனை குறையும். விரக்திகள் மறையும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். தனவரவு உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். குழந்தைகளால் பெருமை சேரும். பொருளாதார வளம் மேம்படும். எதிரிகள் பலம் குறையும். தேக ஆரோக்கியம் திருப்தி தரும். சகோதரியினால் அனுகூலம் உண்டு. ஆபரணச்சேர்க்கை ஏற்படும். கலைத்துறையில் திருப்பம் ஏற்படும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. கடன்சுமை அதிகரிக்கும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். வரவுகள் திருப்தி தரும். விவசாயம் பலன் தரும். கவலைகள் ஒழியும். புதிய நட்பு உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 4,9,8,3
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,Z

(தொடர்ச்சி 22 பக்கம்)



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1143

## மன்றுளாடும் வதிரிபீட விநாயகஉ ஆலயம்

### கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணம

*" களியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொன்*
*ஒளியானைப் பாரோர்க்குதவும் - அளியானைக்*
*கண்ணுவதுங் கைத்தலங்கள் கூப்புவதும் மற்றவற்றாள்*
*நண்ணுவதும் நல்லார் கடன். "*

அஞ்ஞாத வாசம் புரிந்த பாண்டவர்கள் தமது ஆயுதங்களை மறைத்து வைக்கும் இடமாக வன்னிமரப்பொந்துகளைப் பயன்படுத்தியுள்ளனர். அஞ்ஞாதவாசம் நிறைவுற்றுத் தமது ஆயுதங்களை வெளியே எடுத்து, ஆயுத பூசை செய்து வணங்கி, வெற்றித்திருநாளைக் கொண்டாடியதாகப் புராணங்களிலே கூறப்பட்டுள்ளது. இவ்வாறான பல சம்பவங்களோடு தொடர்புகொண்ட வன்னி மரக்கிளையொன்றினை வாழைவெட்டு விழாவின்போது வாழையிலே செருகி, வன்னி வாழைவெட்டு நடைபெறுவது வழக்கம். நவராத்திரி விழாவின் முக்கிய அம்சமான கொலுவைத்தல் மனிதன் வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறி உயர் நிலையை அடைய வேண்டும் என்ற தாற்பரியத்தைக் குறிப்பதோடு, அழகுணர்வையும், பக்தியையும் உணர்த்துவதாக அமைகின்றது.

நவராத்திரிவிழா மிகச் சிறப்பாக இவ்வாலயத்தில் கொண்டாடப்படுவது வழக்கம். நவராத்திரியில் ஓமகுண்டம் அமைத்து வேதியர்கள் மந்திரங்கள் ஓதி, பத்ததி வாசிக்கப்பெற்று, நவராத்திரி விழா பெருவிழாவாக வருடாவருடம் நிகழ்தும் பெருஞ்சிறப்புடைய ஆலயமாக, கொழும்புத்துறை மேற்கு, வதிரிபீட ஸ்ரீ மன்றுளாடும் விநாயகப் பெருமான் ஆலயம் திகழ்கின்றது.

இவ்வாலயத்தின் வரலாறு இலங்கையை ஆட்சி செய்த தமிழ் அரசர்களோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. இவ்வரசர்கள் ஆட்சிக்காலத்தில் சைவமும் தமிழும் தழைத்தோங்கியது என்பதற்கு ஈழத்திலுள்ள ஆலயங்கள் பலவும் சான்று பகருகின்றன. ஈழத்தில் நடைபெற்ற யுத்தத்தினால்,

## (வரலாறும் மரபும்)

ஈழத்தமிழர்களின் இதயமாக விளங்கும் ஆலயங்கள் பலவும் அழிக்கபட்டுள்ளது. இந்நிலையில் ஆலயங்களின் வரலாற்றைத் தெரிந்து தக்கவைத்துக்கொள்வது அனைவரதும் தலையாய கடமையாகும். இதன்மூலம் ஈழத்தமிழரின் சமகால வரலாற்றையும் பாதுகாக்க முடியும்.

விஜயகூழங்கைச் சக்கரவர்த்தி என்பவர் இற்றைக்கு 700 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம், நல்லூரிலே அரசாட்சி செய்துள்ளார். இவர் தென் மதுரையிலுள்ள திருமருங்கூர் என்ற கிராமத்திலிருந்து, கந்தஞ்செட்டி, கதிர்காமச்செட்டி, வேலுச்செட்டி என்போருடன் பல குடும்பங்களையும் அழைத்துவந்து, கொழும்புத்துறையிலே குடியமர்த்தினாரெனக் கர்ணபரம்பரையாக வழங்கப்படுகின்றது. இவர்களின் வழித்தோன்றல்களே இன்று கொழும்புத்துறையில் வாழும் பெருமக்கள் என்று நம்பப்படுகின்றது. அன்று வாழ்ந்த மக்கள் திருக்கோவில்களை அமைத்து, முறைப்படி மூலமூர்த்தியைப் பிரதிஷ்டை செய்து, யந்திரம், மந்திரம், தந்திரம் என்பவற்றால் தாபித்து மக்கள் வழிபட்டு வணங்க வழிவகுத்தனர்.

இலங்கை அன்னியர்வசப்பட்டகாலப்பகுதியாகிய கி.பி 1623 ஆம் ஆண்டளவில் காணிகளின் தோம்பு அரசினரால் பதிவு செய்யப்பட்டது. கொழும்புத்துறை மேற்கில் அமைந்துள்ள மன்றுளாடும் வதிரிபீடவிநாயகர் ஆலயமும் இப்பதிவிலே இடம்பெற்றுள்ளது. வேதாரணியத்திலே அமைக்கப்பெற்ற திருமூலமூர்த்தி மன்றுளாடும் பெருமானாகிய நடராஜப்பெருமானைத் தந்தையாகவும், விநாயகமூர்த்திப் பிள்ளையாரைத் தனது பெயராகவும் பெற்றதால் "செட்டிவேதாரணியம் மன்றுளாடும் பெருமான் விநாயகமூர்த்திப் பிள்ளையார் கோவில்" என இவ்வாலயம் தோம்பிலே பதியப்பட்டுள்ளது.

இவ்வாலயத்திலே எழுந்தருளியுள்ள விநாயகப்பெருமானின் புராதன சுவடிகளை நோக்குமிடத்து, பல அற்புதமான தகவல்களைப் பெறக்கூடியதாக அமைந்துள்ளது. இற்றைக்கு முன்னூற்றைம்பது வருடங்களுக்கு முன்னர், நல்லூர் அரசகுமாரன் எதிர்மன்னசிங்கனை, போத்துக்கேய தளபதி பிலிப்டீஒலிவெரா என்பவன், இக்கோவிலில் வைத்தே சிரச்சேதம் செய்தானென்றும், இவ்வேளையிலே இக்கோவில் குருக்களும் வாளேந்திப் போரிட்டு அரசகுமாரனுடன் வீரமரணம் அடைந்தார் என்றும் கூறப்படும் செய்தி, சந்தர்ப்பம் வரும்போது ஒவ்வொருவருடைய அடிமனதிலும் உறங்கிக் கிடக்கும் உண்மையான உணர்வுகள் வெளிப்படும் என்பதை இச்செய்தி உணர்த்தி நிற்கின்றது.

***வளரும்...***

இலங்கை செய்திகள்
Sri Lanka News

## உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலாளர்களுடனான முன்னாயத்த கலந்துரையாடல்!



எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் தொடர்பாக பிரதேச செயலாளர்களுடனான முன்னாயத்த கலந்துரையாடலானது யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும், தெரிவத்தாட்சி அலுவலருமான திரு. மருதலிங்கம் பிரதீபன் அவர்கள் தலைமையில் 24ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் மாலை 4.00 மணிக்கு அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த தெரிவத்தாட்சி அலுவலர் அவர்கள் நடைபெற்று முடிந்த சனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் நீதியாகவும் சுமுகமாகவும் நடைபெற்றதாகவும் அதற்கு காத்திரமான பங்களிப்பு வழங்கியமைக்கு நன்றியினைத் தெரிவித்ததுடன், இம் முறையும் பிரதேச செயலாளர்களின் பங்கு அதிகளவில் தேவைப்படுவதாகவும் தெரிவித்தார். மேலும், தங்கள் பிரிவில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையங்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறும் தெரிவித்ததுடன் தேர்தல் தேவைப்பாடுகள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார்.

இக் கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்களுக்கான கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. இ. சசீலன் அவர்களால் விளக்கமளிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் உதவித்தெரிவத்தாட்சி அலுவலர்களான பிரதேச செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

## மூளாயில் நடைபெற்ற மாணவர்கள் கௌரவிப்பும் கைவினை பொருட்களின் கண்காட்சியும்!





மூளாய், பொன்னாலை கிராமங்களில் 2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும், சோட்டோகான் கராத்தே போட்டியில் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டி சர்வதேச போட்டிக்கு தெரிவான மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு 23ம் திகதி புதன்கிழமை அன்றையதினம் நடைபெற்றது.

அத்துடன் மூளாயில் உள்ள மலரும் மூளாய் அபிவிருத்தி அமையத்தில் முதலாவது தையல் பயிற்சி நெறியினை நிறைவு செய்த மாணவர்களினால் உருவாக்கப்பட்ட தையல் பொருட்களின் கண்காட்சியும் நடைபெற்றது.



மூளாய் வதிரன்புலோ விநாயகர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன பின்னர் விருந்தினர்களும் மாணவர்களும் மூளாய் வதிரன்புலோ ஆலயத்தில் இருந்து மண்டபம் வரை மங்கல வாத்தியங்கள் முழங்க அழைத்து வரப்பட்டனர்.

பின்னர் மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. தொடர்ந்து விருந்தினர்களது உரை, மாணவர்களது கலை நிகழ்வுகள், மாணவர்களுக்கான கௌரவிப்பு போன்றன இதன்போது இடம்பெற்றன.

மலரும் மூளாய் அபிவிருத்தி அமையத்தால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார் தலைமன்னார் பகுதியில் இராமர் பாலத்தின் 6 மணற் திட்டுக்கள் வரையில் மே 15 ஆம் திகதி முதல் சுற்றுலாப் படகு சேவை

மன்னார் தலைமன்னார் பகுதியில் காணப்படுகின்ற கடலுக்குள் உள்ள ஆறு தீடைகள் ராமர் பாலம் என அழைக்கப்படும் பகுதியை சுற்றுளா பயணிகள் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்படவுள்ளதாக மாவட்ட அரச அதிபர் கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இப் படகு சேவை தொடர்பான விசேட கலந்துரையாடல் கடந்த 21ம் திகதியன்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது

கலந்துரையாடலில் வட மாகாண சுற்றுலா பணியகத்தின் தலைவர் பத்திநாதன் மற்றும் மன்னார் மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள உதவி பணிப்பாளர் Wm கீர்த்தி ஸ்ரீ சந்திர்ரத்தின மற்றும் பிரதேச செயலாளர் முப்படையினர் போலீஸ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மே மாதம் 15 ஆம் திகதி இத்திட்டத்தினை ஆரம்பிக்கப்பட உள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மிக விரைவாக மேற்கொள்ளப்படும்.

பாதுகாப்பு அமைச்சினால் அனுமதி வழக்கபட்டு நீண்ட காலமாக தாமதமான இந்த திட்டத்தினை வெகு விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கான பூர்வாக்க வேலைகள் ஆரம்பிக்கபட்டுள்ளது.

இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான இக்கூட்டத்தில் குழு ஒன்று நிறுவப்பட்டுள்ளது என்றார்.

இதேநேரம் பாதுகாப்பு ஏற்பாடுகள், பயணிகள் எண்ணிக்கை, முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பில் இன்று கடற்படையினர் அறிக்கை சமர்ப்பிப்பர் எனவும் தீர்மானிக்கப்பட்டதோடு அடுத்த கட்டமாக சுற்றுலாப் பயணிகளிடம் அறவிடும் கட்டணம் தொடர்பில் தீர்மானிப்பதாகவும் அன்றைய கூட்டத்தில் முடிவு காணப்பட்டுள்ளது.

# இவ்வார ராசிபலன்

(20 பக்கத் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** கணவன், மனைவி கௌரவம் உயரும் வாரம். பாராட்டுக்கள் கிடைக்கும். ஞாபக மறதி ஏற்படும். பேச்சில் நிதானம் தேவை. திருமண வாய்ப்பு கூடி வரும். திடீர் லாபம் தரும். மனக்குழப்பம் நீங்கும். மற்றவர்கள் உதவி கிட்டும். வியாபார லாபம் கூடும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. யோகமான காலம். ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். கமிஷன் தொழில் லாபம் தரும். புதிய முதலீடு உண்டாகும். கற்பனை வளம் அதிகரிக்கும். கடன் தொல்லை தீரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பகையாளிகளின் நிலை மாறும். பெண்வழி பிரச்சனை முடிவுக்கு வரும். திட்டம் வெற்றி பெறும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வினோதமான எண்ணங்கள் விலகும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. சட்டம் சாதகமாகும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். பட்டம் பதவி வந்து சேரும். சுபச்செய்திகள் வரும். மாலை நேரத்தில் செய்யும் பிரார்த்தனை மன அமைதியைத் தரும். பெண்களுக்கு யோகம் கூடும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. விரயங்கள் அதிகமாகும். வீண் வம்பு உருவாகும். இரும்பு தொழில் ஏற்றம் தரும். அணிகலன் சேரும். தாய்வழி உறவில் கவனம் தேவை. பாதகமான சூழ்நிலைகள் அகலும். சுபச்செலவு வரும். வினைகள் அகலும். உற்சாகம் களை கட்டும். வேலை பளு அதிகமாகும். புதிய சிந்தனை உருவாகும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். புதுமைகள் நிறைந்த காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: வலம்புரி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,3,5,1
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,F




**தனுசு:** எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும் வாரம். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். கல்வியில் மந்த நிலை காணப்படும். ஏற்றுமதி தொழில் லாம் தரும். செயலில் துணிவு கூடும். நீண்டநாள் கனவு நிறைவேறும். குடும்ப உறவு பலப்படும். தனவரவு உண்டு. உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். வேண்டாத விஷங்கள் விலகும். சுயத்தொழிலில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். உடல்வலி தோன்றி மறையும். விருப்பமான தொழில் அமையும். திடீர் செலவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. பெற்றோரின் ஆசி உண்டு. பேச்சில் கம்பீரம் இருக்கும். சுப விரயம் ஏற்படும். உடல்நிலையில் கவனம் தேவை. சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். உண்மைகள் வெளிப்படும். பக்கத்து வீட்டு பகை மாறும். மெத்தனப்போக்கு மாறும். மேன்மைகள் அதிகரிக்கும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். திறமைகள் வெளிப்படும். முடிவுகளில் தெளிவு இருக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும். மனோதைரியம் அதிகரிக்கும். விரும்பிய பொருள் கிடைக்கும். வாகன மாற்றம் ஏற்படும். மன அமைதி சீர்குலையும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர் நலனில் அக்கறை கூடும். பணியில் கண்டிப்பு தேவை. வாக்குவாதங்கள் ஏற்படும். ஆபரணப் பொருள் களவுப்போகும். குடும்ப வளர்ச்சி கூடும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகரிக்கும். நட்டமில்லாத நன்மை உண்டு. திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். கடல் கடந்த பயணம் உண்டாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 2,1,4,9
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிரஷ்ட எழுத்துக்கள்: A,Q




**மகரம்:** சுபச்செய்தி வரும் வாரம். சிக்கனத்தை கையாள வேண்டும். வெளியூர் பயணம் வெற்றி தரும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். பிள்ளைகளால் நல்ல செய்தி வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உறவினர்கள் வருகை உண்டு. உத்தியோக உயர்வு உண்டு. கண்ணாடிப் பொருட்கள் சேதம் உண்டாகும். ஆறுதலான சூழ்நிலை அமையும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். திருப்தி பெருகும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். மனைவியால் மதிப்பு உயரும். புதிய முயற்சிகளை தள்ளி வைக்கவும். பொறாமைகள் அதிகரிக்கும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். மாற்று இன நட்புப் பெருகும். வயிற்று உபாதைகள் வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மைத் தரும். தொழில் முன்னேற்றம் மகிழ்ச்சி தரும். எதிர்மறை எண்ணம் உருவாகும். கணவன், மனைவி இடையே நல்லதொரு புரிந்துணர்வு ஏற்படும். வீடு வாங்கும் வாய்ப்பு உள்ளது. மனதில் குழப்பம் தீரும். மனதில் உள்ள பாசம் வெளிப்படும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். சுபிட்ஷங்கள் பெருகும். கடன் கொடுப்பவராக இருப்பீர்கள். உங்களால் நிறைய பிரச்சனைகள் அகலும். வீட்டில் சந்தோஷம் நிலவும். மனஅமைதி உண்டாகும். புகழும், பொருளும் பெருகும். கனவுத்தொல்லை உண்டு. கைப்பொருள் ஒன்று களவுப்போகும். உறவினரால் உற்சாகம் உண்டு. பூர்வீகச் சொத்து சேரும். ஜீவ ராசிகளுக்கு உணவு அளித்து பலன் பெறலாம். யோக பலம் கூடும். அலைச்சல் குறையும். குதூகலம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: திரிபுரசுந்தரி அம்மன், அதிர்ஷ்ட எண்: 7,5,4,2
அதிர்ஷ்ட நிறம்: பழுப்பு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,J




**கும்பம்:** செல்வாக்கு பெருகும் வாரம். குடும்ப ஒற்றுமை கூடும். சுபச்செய்தி கூடி வரும். தொழில் வளர்ச்சி கூடும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். செயல்திறமை வெளிப்படும். விவசாயம் லாபம் தரும். விவாத முயற்சி வெற்றி தரும். உதவிகள் கிடைக்கும். நிதி நிலைமை சீராகும். விருந்தினர் வருகை உண்டு. குழந்தைகளால் அல்லல் ஏற்படும். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். மனதில் உற்சாகம் கூடும். ஆயுள் விருத்தி அதிகரிக்கும். வீண் வம்பு விலகும். குடும்ப சண்டைகள் முற்றிலும் அகன்றுவிடும். செயல்களில் கவனம் தேவை. வியாபாரத்தில் நன்மை உண்டு. மருத்துவச் செலவு குறையும். மனோ பயம் நீங்கும். மனை வாங்கும் யோகம் உண்டு. நோயிலிருந்து பூரண குணமடைவீர்கள். குடும்ப சேமிப்பு உயரும். இனிய தகவல்கள் வந்து சேரும். பழைய நண்பர்கள் சந்திப்புக் கிட்டும். தனவரவு பெருகும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். வாகன அபிவிருத்தி உண்டு. எண்ணிய காரியம் கைக்கூடும். இன்னல்கள் அகலும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. அரசியலில் புகழ் கூடும். மாணவர்கள் பாராட்டுப் பெறுவார்கள். பகைவர் பணிந்து நிற்பர். பொறுப்புக்கள் கூடும். பொருளாதாரம் சிறப்பு தரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். முடிவுகள் சாதகமாகும். உறவுகளால் நன்மை உண்டு. காதலில் மோதல் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். விருந்தினர் வருகையுண்டு. உத்யோக உயர்வு உண்டு. பாராட்டுக்கள் அதிகமாகும். வெற்றிகள் குவியும். சிறிய இடையூறு ஏற்படும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். மற்றவர்களால் பாராட்டப்படுவீர்கள். உடல்நலம் சீராகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பொன்னியம்மன், அதிர்ஷ்ட எண்: 1,5,4,9
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,I




**மீனம்:** பெருமைகள் சேரும் வாரம். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். எதிர்ப்புக்கள் அடங்கும். பிரார்த்னை நிறைவேறும். பித்தளைத் தொழில் லாபம் தரும். தோல்விகள் விலகும். கட்டிடத் தொழில் லாபம் தரும். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். புதிய பதவிகள் கிட்டும். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றம் நன்மை தருமத். பொருள் வரவு திருப்தி தரும். இயந்திர தொழிலால் லாபம் உண்டு. குடும்பம் மேன்மை தரும். ஆரோக்கியம் சீராகும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். நல்லோர்கள் நட்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். பழைய கடன் வசூலாகும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். புண்ணிய ஸ்தல பயணம் உண்டு. உடன் பிறந்தவரால் ஆதாயம் உண்டு. கூட்டுத்தொழிலில் மோசடி ஏற்படும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். தனவரவு உண்டு. மறைமுக எதிர்ப்பு அதிகமாகும். பதவி உயர்வு கிடைக்கும். தாய்வழி உறவால் நன்மை உண்டு. புகழ்ச்சி அதிகரிக்கும். நோய் நொடிகள் அகலும். சேய் நலம் கூடும். பிரச்சனைகள் குறையும். காதல் எண்ணம் நிறைவேறும். கலை ஆர்வம் கூடும். நிதி நிலைமை திருப்தி தரும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். தொல்லைகள் ஒழியும். போட்டிகள் குறையும். விடாமுயற்சி அவசியம். சுபச்செலவுகள் அதிகரிக்கும். வழக்கு சாதகமாகும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். காரியங்களில் வெற்றிக் காண்பீர்கள். ஆலோசனை பலன் தரும். விவாக முயற்சி வெற்றி தரும். பெண்களின் கௌரவம் உயரும். வேற்று மனிதரால் லாபம் அதிகரிக்கும். வேலை வாய்ப்புக் கூடும். பாதிப்புக்கள் அகலும். தடுமாற்றம் ஏற்படும். வருத்தங்கள் மறையும். தொழில் மேன்மை தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குலசை முத்தாரம்மன், அதிர்ஷ்ட எண்: 4,3,1,9
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,K

## வாழ்க்கை நகர்கிறது

நீ
நாளை வா
என்றான் லோபி
நீ
காலத்தை
வென்று விட்டாய்
என்றான் ஞானி.

சில
வாய்கள் அகில் போல்
மணக்கிறது ஆனால்
வார்த்தை மட்டும்
கால்வாயாய் நாறுகிறது.

முயலையும் ஆமையையும்
ஒன்று குழைத்துச் செய்த
குணத்திலே தங்கிவிடுகிறது
இங்கு பலரது வாழ்க்கை.

நீண்ட தொல்
நினைவுகளில்
நிம்மதி காண்கிறேன்
மாண்டு போன மழலையினை.

உன்னைக் கடந்து
செல்லவே நினைக்கிறேன்
தொடர்ந்து வருகிறது நிழல்.

**கோ. தனுசன்**
**மட்டக்களப்பு, இலங்கை**

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL RESIDENTIAL VACANT LAND

INDUSTRIAL CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal



CALL US

**NESAN**

**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record


PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

Trinity Thaiyal
Tailoring and Alteration Services
Mary James: (647) 467-1410
Located: Neilson and Sheppard
நாம் வழங்கும் தையல் சேவைகள்:
சாறி பிளவுஸ், சல்வார், லெங்கா, பாவாடை,
ஆண்களுக்குரிய ஆடைகள் தைத்தல் மற்றும் பல தையல்கள்
வேலைகள், அத்துடன் உங்கள் சேலைகள் அழகாக உடுக்கக்
கூடிய வகையில் Pleating செய்தல்
Instagram: @trinitythaiyal

உதயம் 1516 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 25, 2025

## 'EARTH DAY Community Cleanup' initiated by Community Activist Deepak Talreja at Riverwalk Park in Markham



# மார்க்கம் சமூகச் செயற்பாட்டாளர் Deepak Talreja ஏற்பாடு செய்த"உலக பூமி தினம்" கொண்டாட்டம் சார்ந்த "சுத்திகரிப்புத் திட்டம்

கடந்த பல வருடங்களாக மார்க்கம் நகரில் சமூக மற்றும் அரசியல் நிகழ்வில் எப்போதும் சமூகமளித்து தீவிரமான செயற்பட்டும் தமிழ்ச் சமூகத்தோடு நெருங்கிய தொடர்பைக் கொண்டவருமான சமூகச் செயற்பாட்டாளர் **Deepak Talreja** அவர்களால் ஏற்பாடு செய்யப்பெற்ற "உலக பூமி தினம்" கொண்டாட்டம் சார்ந்த "சுத்திகரிப்புத் திட்டம் கடந்த சனிக்கிழமை 19ம் திகதி மதியத்திற்குப் பின்னர் நடைபெற்றது.
(தொடர்ச்சி 16ம் பக்கம்)

# கனடாவில் "நிலக்கிளி" அ. பாலமனோகனின் "நிலக்கிளி" ஆங்கில மொழி மூல பதிப்பு மற்றும் மிஸ்டர் மங் ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா

இன்றிலிருந்து சுமார் 52 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் வீரகேசரிப் பதிப்பாக வெளிவருந்து இலட்சக் கணக்கான வாசகர்களின் பாராட்டுக்களைப் பெற்ற "நிலக்கிளி" நாவல் புகழ் அ. பாலமனோகரன் அவர்களின் "நிலக்கிளி" ஆங்கில மொழி மூல பதிப்பு மற்றும் மிஸ்டர் மங் ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா கனடாவில் சிறப்பாக நடைபெற்றது.
தற்பொழுது டென்மார்க் தேசத்தில் தனது துணைவியார் சகிதம் வாழ்ந்து வரும் புகழ்பெற்ற எழுத்தாளரும் இன்னும் தொடர்ச்சியாக எழுத்துலகில் சஞ்சரித்து வருபவருமான அ. பாலமனோகரன் அவர்களைக் கொண்டாடும் முகமாகவும் அவரைப் பாராட்டும் வகையிலும் மேற்படி விழாவை கனடாவில் வெற்றிகரமாக சேவைநோக்கோடு இயங்கிவரும் "வன்னிச் சங்கம் - கனடா சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது. (தொடர்ச்சி 16ம் பக்கம்)





# ஸ்காபுறோ நகரில் Sai Autism Learning Centre நிறுவனத்தின் திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது.


கடந்த சில வருடங்களாக திருமதி சத்தியா சுரேஸின் நிர்வாகத்தில் இயங்கிவரும் **Sai Autism Learning Centre** நிறுவனத்தின் புதிய அலுவலகத்தின் திறப்பு விழா ஸ்காபுறோ நகரில் சிறப்பாக நடைபெற்றது.
கடந்த 21ம் திகதி திங்கட்கிழமை மாலை 85 **Dynamic Drive -Unit 2A** என்னும் விலாசத்தில் அமைந்தள்ள கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ள அலுவலகம் மற்றும் வகுப்பறைகள் ஆகியவை அமைந்துள்ளன.
மேற்படி திறப்பு விழாவிற்கு ரொறன்ரொ கல்விச் சபையின் தலைவர் நீதன் சண்முகராஜா மற்றும் உறுப்பினர் திருமதி யாழினி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு தங்கள் சிறப்புரைகளை ஆற்றினார்கள்.
நிறுவனத்தில் கற்றலையும் பராமரித்தலையும் மேற்கொண்டு வரும் சிறார்கள் மற்றும் அவர்களது பெற்றோர் உட்பட பலர் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டார்கள். **Sai Autism Learning Centre** நிறுவனத்தின் நிறுவனர் சத்தியா சுரேஸ் அவர்களது ஆற்றல் கற்பித்தல் திறன் ஆகியவற்றையும் தங்கள் பிள்ளைகளின் திறன் வளர்ச்சி ஆகியவை தொடர்பாக அன்னையர்கள் சிலர் மிகுந்த திருப்தியோடு எடுத்துரைத்தார்கள்.
இந்த நிறுவனத்தைத் தொடர்பு கொள்ள 647 444 4033 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

# கடந்த 15 வருடங்களாக கலை சார்ந்த பணிகளை ஆற்றிவரும் "கிழக்கு ஒளி இணையம்" நடத்திய "சித்திரை நிலா" பல்சுவைக் கலை விழா

கனடாவில் கடந்த 15 வருடங்களாக இயங்கி கலை சார்ந்த பணிகளை ஆற்றிவரும் "கிழக்கு ஒளி இணையம்" ஏற்பாட்டில் நடைபெற்ற "சித்திரை நிலா" பல்சுவைக் கலை விழா கடந்த 19-04-2025 அன்று சனிக்கிழமையன்று மாலை நோர்த் யோர்க் நகரில் உள்ள கா-டினல் மக்கிகான் கத்தோலிக்க பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.
கலைஞரும் கவிஞருமான மதிபாஸ்கரன் அவர்களைத் தலைவராகக் கொண்டு இயங்கிவரும் இந்த "கிழக்கு ஒளி இணையம்" பல அங்கத்தவர்களைக் கொண்டு சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.
அன்றைய விழாவில் முக்கிய நிகழ்ச்சியாக "இலங்கை வேந்தன்" என்னும் பெயரில் இராவணனின் கதை சொல்லும் நாட்டுக் கூத்தும் இடம்பெற்று அனைவரதும் பாராட்டுக்களைப் பெற்றது.
அத்துடன் உள்ளூர்க் கலைஞர்களின் நடனங்கள் மற்றும் பாடல் நிகழ்வுகள் அனைத்தும் சிறப்பாக இடம்பெற்றன.
இங்கே காணப்படுகின்ற படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.
(செய்தியும் படங்களும் : சத்தியன்)





Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8


# ஜே.வி.பி.யின் கொள்கையினை பின்பற்றும் "தமிழரசை" நாம் ஆதரிக்க வேண்டுமா? தமிழ் மக்களிடம் கேட்கிறார் கஜேந்திரகுமார்



ஜே.வி.பி.யை பிழையென்று பிரசாரம் முன்னெடுக்கும் தமிரசுக்கட்சி ஜே.வி.பி.யின் ஒற்றை ஆட்சிக்கு ஆதரவு வழங்குகின்றது. அவ்வாறானால் ஜே.வி.பி. பிழையென்றால் ஜே.வி. பி.யின் கொள்கையினை பின்பற்றிச் செல்லும் தமிழரசுக்கட்சி சரியா ? என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும் என அகில இலங்கை தமிழ் காங்கிரசின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.
கல்குடா தேர்தல் தொகுதியில் ஏறாவூர்ப்பற்று பிரதேச சபைக்கான வேட்பாளர் அறிமுக கூட்டம் 22ம் திகதி செவ்வாய்க்கிழமை களுவன்கேணியில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி மற்றும் தமிழ் மக்கள் பேரவை என்பன இணைந்து இம்முறை கிழக்கில் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் களமிறங்கியுள்ள வேட்பாளர்களின் அறிமுக கூட்டம் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தலைமையில் இடம்பெற்றது. (தொடர்ச்சி 18ம் பக்கம்)